# உள்ளே . . .


| | |
|---|---|
| 03 | ஆசிரியரிடமிருந்து... |
| 04 | ஆய்வும் சுயஆய்வும் — சுவாசத்தில் நோயின் வாசம் — அருள்பணி. ஜெ. மரிய அந்தோனி |
| 06 | இம்மாதச் சிறப்பு — கிறிஸ்துவின் மதிப்பீடுகளில் லெவே அடிகளாரின் புனிதம் — அருள்பணி. லூர்துராஜ் |
| 16 | புனிதர்கள் — விவிலியப் பார்வையில் புனித யோசேப்பு — மாரா |
| 18 | சிந்தனை பகுதி — வெற்றி நமதே — திரு. ச. ஜெயராஜ் |
| 24 | தவக்கால சிந்தனை — மன்னிப்பு ஒரு தொடக்கம் குணமாதல் ஒரு பயணம் — அருள்பணி. பாஸ்டின் பாரதி |
| 27 | மறைமாவட்டச் செய்திகள் |





வெளியிடுபவர்

மேதகு முனைவர் **லூர்து ஆனந்தம் D.D.**
சிவகங்கை மறைமாவட்ட ஆயர்

ஆசிரியர்

அருள்பணி. **அ. அந்தோனி எட்வர்ட் ராஜ்**
✆ 7558175669

ஆசிரியர் குழு

அருள்பணி. **S. செபஸ்தி**
அருள்பணி. முனைவர் **R. மரிய டெல்லஸ்**
அருள்பணி. முனைவர் **M.R. சேசு**
முனைவர் **ஸ்டீபன் மிக்கேல்ராஜ்**
திரு. **சோமசுந்தர பாரதி**

ஆலோசகர்கள் குழு

அருள்பணி. **A. சிங்கராயர்**
அருள்சகோ. **அகஸ்டின்**
திரு. **வெட்டிவயல் வளவன்**
திரு. **அலெக்ஸாண்டர்**
திரு. **வியாகுல சந்தியாகு**
திருமதி. **மேரிபாரதி**

அலுவலகம்

**ஆனந்த கங்கைத் தூது**
வியான்னி அருள்பணி மையம்
மதுரை சாலை, சிவகங்கை – 630 561

தொடர்புக்கு

மாதா டிவி : 7558175669
கங்கைத் தூது : 7558175669

மின்னஞ்சல் : anandacommunicationsvg@gmail.com

அலுவலக நேரம் : காலை 9.30 – மாலை 4.30 வரை

சந்தா விபரம்

ஆண்டு சந்தா – ₹ 150
ஆயுள் சந்தா (12 ஆண்டுகள் ) – ₹ 1,500



விளம்பரக் கட்டணம்

| | |
|---|---|
| பின்பக்க அட்டை | – ₹ 6,000 |
| அட்டை உள்பக்கம் | – ₹ 5,000 |
| முழுபக்கம் | – ₹ 3,000 |
| அரைப்பக்கம் | – ₹ 1,500 |


உங்கள் மேலான படைப்புகள்
வந்துசேர வேண்டிய கடைசி நாள்
**12.03.2026**

மார்ச் மாத தலைப்பு
**"அக அமைதியே உயிர்ப்பு"**


இதழ் சந்தா / மாதா தொலைக்காட்சி நன்கொடையினை வங்கியில் செலுத்த :

| | |
|---|---|
| **Bank Name** | **: Canara Bank, Sivagangai** |
| **Account Name** | **: Communication Commission** |
| **A/c. No.** | **: 5157101011835** |
| **IFS Code** | **: CNRB0005157** |

குறிப்பு : தங்கள் சந்தாவினை புதுப்பிப்பவர்கள் பெயர், சந்தா எண், முகவரியைத் தெளிவாகக் குறிப்பிடவும். வங்கியில் செலுத்துபவர்கள் விபரங்களை SMS செய்யவும்.

# ஆயரின் பணித்திட்டம்



| | | | |
|---|---|---|---|
| பிப் 28– மார்ச் 1 | | வல்லணி பங்கு சந்திப்பு | வல்லனி |
| 02 | | புதுப்பிக்கப்பட்ட ஆலயம் அர்ச்சிப்பு | மூக்கையூர் |
| 07 | | பச்சேரி – நினைவுத் திருப்பலி | வே. மிக்கேல்பட்டணம் |
| 08 | | தவக்காலத் தீவு மையத்தியானம் – திருப்பலி | தங்கச்சிமடம் |
| 09-13 | | கர்தினால், அருள்பணியாளர்கள், துறவியர்கள் கூடுகை | ஹைதராபாத் |
| 14 | | பட்டியலினத்தார் பணிக்குழு – பெண்கள் தினக் கொண்டாட்டம் | தேவகோட்டை |
| 17 | | பாம்பன் தீவு முன்னேற்றம் பற்றிய கூட்டம் | தங்கச்சிமடம் |
| 21 | மா | இறைஊழியர் லெவே தின சிறப்புத் திருப்பலி | சருகணி |
| 24 | | SMSSS செயற்குழு கூட்டம் | பரமக்குடி |
| 25 | | ஆனந்தா கல்வி அறக்கட்டளை கூட்டம் | தேவகோட்டை |
| 28 | | நற்செய்திப் பணியாளர்கள் அர்ப்பண விழா | அமைதியகம். |
| 29 | | குருத்து ஞாயிறு திருப்பலி, பேராலயம் | சிவகங்கை |
| 30 | கா | அருள்பணியாளர்கள் கூடுகை, வியான்னி | சிவகங்கை |
| | மா | திரு எண்ணெய் திருப்பலி, பேராலயம் | சிவகங்கை |


✝



நான் பசியாய் இருந்தேன். நீங்கள் உணவு கொடுத்தீர்கள். (மத் 25:35)



**ஆனந்தா**

**நண்பகல் உணவுத்திட்டம்**

சிவகங்கை மறைமாவட்டம்

**நீங்களும் எம் கனவுத் திட்டத்தில் பங்கேற்கலாமே!**



**பகிர்வோம்**
**பசிபோக்குவோம்**

ஆனந்தா மதிய உணவுத் திட்ட வங்கிக் கணக்கு விபரம்

A/C No. : **99 90 25 12 15 08 59**
A/C Name : **ANANDA CHARITABLE TRUST**
IFSC Code : **HDFC0002576**
Branch : **SIVAGANGAI**
Bank : **HDFC**

# ஆனந்த கங்கை தூதுவிடமிருந்து...

*ஆனந்த கங்கை தூதுவின் இனிய இதயங்களே!*

அனைவருக்கும் வாழ்த்துக்களும் வணக்கங்களும்.

"நம் மகிழ்ச்சியின் உச்சம் நம்மோடு பயணிப்பவர்களின் இன்பத்தின் மிச்சமே" தவம், தானம், செபம் என தவச்செயல்களை முழுமனத்தோடு செய்து கொண்டிருக்கும் எம் இனிய வாசகப் பெருமக்கள் அனைவரும் இறையருள் பெற வாழ்த்துகின்றேன், செபிக்கின்றேன். "உள்ளே வாருங்கள்" எனும் இம்மாத இதழ் வழியாக உங்களின் கண்களுக்கு வியப்பூட்டும் விதமாக உங்களின் உள்ளங்களின் உள்ளே வருவதிலே பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

யாராவது நம்மைப் பார்த்து உள்ளே வரலாமா என்று கேட்டால் நாம் என்ன செய்வோம். உள்ளே வரலாம் என கூறுவோமா? உள்ளே வாருங்கள் என கூறுவோம். யாரைப் பார்த்து? நமக்குப் பிடித்தவர்களை, நமக்கு தேவைப்படுபவர்களை, நமக்கு பிடித்ததை வைத்திருப்பவர்களை அல்லது அதிக பணம் வைத்திருப்பவர்களை, அதிக உடைமைகளை வைத்திருப்பவர்களை, பதவியில் இருப்பவர்களை நாம் தயங்காமல் உள்ளே வாருங்கள் என அழைப்போம். ஆனால் எதுவுமே இல்லாதவர்களை நாம் உள்ளே வாருங்கள் என அழைப்பதற்கு தயக்கம் காட்டுகின்றோம். நம்மிடம் வருபவர்களெல்லாம் அல்லது வருவதெல்லாம் நமக்கு நன்மை அளிக்காது. சில நேரங்களில் கானல் நீரைப் போல மகிழ்ச்சியைக் கொடுத்துவிட்டு பல நேரங்களில் காட்டாறு வெள்ளம் போல மகிழ்ச்சியைக் கெடுத்து விடுகின்றன.

பெயர், பெருமை, புகழ், பதவி, பணம், ஆடம்பரம், பட்டம், தற்பெருமை இவைகளை நம்முள்ளே அனுமதித்தால் மகிழ்ச்சி சில காலமே. ஆனால் அன்னை தெரசாளின் எளிமையை, புனித அருளானந்தர், இறை ஊழியர் லூயி மரி லெவே பகிர்ந்த உண்மையை, புனித சூசையப்பரின் வாய்மையை, அன்னை மரியாளின் தூய்மையை நம்முள்ளே அனுமதித்தால் மகிழ்ச்சி பல காலங்கள் நிலைத்து நிற்கும்.

இவ்விதழ் இந்த தவக்காலத்தில் நம்முள்ளே யாரை, எவற்றை அனுமதிக்கலாம் என்பதை தெளிவாக விவரிப்பதாக அமைந்திருக்கிறது. நாம் யாரை, எவற்றை உள்ளே வாருங்கள் என அழைப்பு விடுக்க இவ்விதழ் வழியாக இத்தவக்காலம் நம்மைச் சிந்திக்க அழைப்பு விடுக்கிறது.

**தாகமாய் இருப்பவர்களுக்குத் தண்ணீர் கொடு**
**பசியால் துடிப்பவர்களுக்கு உணவு கொடு**
**நோயில் அல்லல்படுபவருக்கு உதவு**
**தனிமையில், சிறையில் வாடுவோர்க்கு ஆறுதல் கூறு**
**முதியவர்களுக்கு மதிப்பு கொடு**
**தேவையில் இருப்போரின் தேவையை நிறைவேற்று**

இத்தகைய செயல்களை, பண்புகளை இத்தவக்காலத்தில் நம்முள்ளே அனுமதித்து செயல்படுத்தினால் நாம் அனைவரும் இறைவனின் அருளை, ஆசீரை, இரக்கத்தை முழுமையாக அனுபவிக்கலாம்.

"**கடவுளை அணுகிச் செல்லுங்கள்; அவரும் உங்களை அணுகி வருவார்**" யாக். 4:8

இயேசுவின் அன்பில்
அருள்பணி. **அ. அந்தோனி எட்வர்ட் ராஜ்**
செயலர், ஊடகப் பணிக்குழு,
சிவகங்கை மறைமாவட்டம்.

# மீட்பின் வரலாற்றில் புனித யோசேப்பு

✍ மாரா

**முன்னுரை:**

மீட்பின் வரலாறு என்பது கடவுள் மனித வரலாற்றுக்குள் நுழைந்து, மனிதரை அவர்களிடமிருந்தே மீட்கும் தெய்வீக செயல்பாட்டின் வரலாறு. இந்த வரலாற்றில், இறைவாக்கினர்கள் பேசினர், அரசர்கள் ஆட்சி செய்தனர், தூதர்கள் வானத்திலிருந்து அறிவித்தனர். ஆனால் இத்தனை சத்தங்களுக்கிடையே, எந்த வார்த்தையும் பேசாமல், முழு மீட்பின் ஆரம்ப கட்டத்தை தாங்கி நின்ற மனிதன் புனித யோசேப்பு.

நற்செய்திகளில் யோசேப்பின் சொற்கள் ஒன்றும் பதிவு செய்யப்படவில்லை. இது ஒரு குறைபாடல்ல. மாறாக, ஒரு தெய்வீகத் தேர்வு. ஏனெனில், யோசேப்பின் வாழ்க்கை முழுவதும் "வார்த்தையாக" மாறுகிறது. அவர் பேசவில்லை. ஆனால் கடவுளின் வார்த்தைக்கு இடம் கொடுத்தார். அவர் முன்வரவில்லை. மாறாக, கடவுளின் திட்டம் சிதறாமல் இருக்க தன்னை முழுவதும் ஒப்படைத்தார்.

இயேசு உண்மையான கடவுளும் உண்மையான மனிதனுமாக உலகில் வாழ்ந்தார். அந்த மனித வாழ்க்கை பாதுகாப்புடன், ஒழுங்குடன், சமூகத்துக்குள் வளர்வதற்கு ஒரு தந்தை அவசியமாக இருந்தார். அந்த தந்தை யோசேப்பு. அவர் இல்லாமல் மீட்பின் ஆரம்ப வரலாறு முழுமையடையாது.

**யோசேப்பும் மீட்பின் வரலாற்றின் மனித பரிமாணமும்**

மீட்பின் வரலாற்றில் நாம் காணும் அடிப்படை உண்மை ஒன்றுண்டு, அது, கடவுள் மனிதரை மீட்க மனிதர்களைத் தாண்டி செயல்படுவதில்லை.

அதாவது, கடவுள் தம் மீட்புத் திட்டத்தை வானுலகச் சக்திகளால் மட்டும் நிறைவேற்றவில்லை. மாறாக, மனித வரலாற்றுக்குள் நுழைந்து, மனிதர்களின் வாழ்க்கை, உறவுகள், பொறுப்புகள், உழைப்பு ஆகியவற்றின் வழியாகவே அதை நிறைவேற்றினார். இவ்வுண்மை யோசேப்பின் வாழ்க்கையில் மிகவும் தெளிவாக வெளிப்படுகிறது. கடவுள் தம் மகனை உலகிற்கு அனுப்ப விரும்பியபோது, ஒரு தனிமையான தெய்வீக நிகழ்வை ஏற்படுத்தவில்லை. மாறாக, ஒரு குடும்பத்தைத் தேர்ந்தெடுத்தார். அந்த குடும்பம் வரலாற்றின் நடுவில், சமூகத்தின் மத்தியில், அரசியல் மற்றும் பொருளாதார அச்சுறுத்தல்களுக்கிடையே வாழ வேண்டியிருந்தது. அந்த குடும்பம் பாதுகாப்பாகவும், ஒழுங்காகவும், சமூகத்தில் நிலைத்திருக்கவும் ஒரு மனிதர் தேவைப்பட்டார். அந்த மனிதர், யோசேப்பு. யோசேப்பு ஒரு இறைவாக்கினர் அல்ல. மக்களிடம் கடவுளின் வார்த்தையை அறிவித்தவர் அல்ல. அவர் ஒரு ஆசிரியர் அல்ல. அவர் ஆலயச் சடங்குகளின் மையத்தில் நின்றவர் அல்ல. அவர் ஒரு அரசர் அல்ல. அவர் அதிகாரம் செலுத்தியோ, சட்டம் இயற்றியோ இல்லை. அவர் ஒரு தச்சன். ஒரு தொழிலாளி. ஒரு குடும்பத் தலைவர். ஒரு சாதாரண மனிதர்.

ஆனால் இங்கே விவிலியத்தின் புரட்சிகரமான பார்வை வெளிப்படுகிறது. கடவுளின் பார்வையில் "சாதாரணம்" என்ற சொல்லே இல்லை. மனிதர்கள் சாதாரணம் என்று கருதுவதையே கடவுள் தம் மீட்புத் திட்டத்தின் மையமாக மாற்றுகிறார். கடவுள் யோசேப்பைத் தேர்ந்தெடுத்தது அவரது கல்வி, புகழ், அல்லது சமூக அந்தஸ்தின் அடிப்படையில் அல்ல. அவர் தேர்ந்தெடுக்கப்பட்டது நம்பிக்கையின் அடிப்படையில். சொல்லப்படாத, ஆனால் வாழப்பட்ட நம்பிக்கையின் அடிப்படையில். யோசேப்பின் நம்பிக்கை வார்த்தையில் அல்ல, செயல்களில் வெளிப்படுகிறது.

அவர் கேள்வி எழுப்பாமல் கடவுளின் அழைப்பை ஏற்றுக்கொள்கிறார். அவருக்கு முழுமையாக புரியாத நிலையிலும், கடவுளின் திட்டத்திற்கு இடமளிக்கிறார். அவர் தன்னை மையமாக வைக்காமல், கடவுளின் செயலை மையமாக வைக்கிறார். இதன் வழியாக ஒரு முக்கியமான தத்துவ உண்மை வெளிப்படுகிறது. மீட்பின் வரலாறு அதிசயங்களால் மட்டுமல்ல, அன்றாட மனித பொறுப்புகளால் கட்டப்படுகிறது.

மரியாளையும் குழந்தையையும் பாதுகாப்பது, இரவில் எழுந்து எகிப்துக்குச் செல்லுவது, புதிய இடத்தில் வாழ்வாதாரம் தேடுவது, ஒரு குழந்தையை வளர்ப்பது, தினமும் உழைப்பது, இவை அனைத்தும் தெய்வீக மீட்பின் கருவிகளாக மாறுகின்றன. யோசேப்பின் வாழ்க்கை நமக்கு சொல்லும் செய்தி இதுவே. கடவுளின் மீட்புத் திட்டத்தில் மனித நம்பிக்கையும், மனித பொறுப்பும் அவசியமானவை.அதிசயங்கள் அரிதாக நிகழலாம்; ஆனால் மீட்பு, பெரும்பாலும், மௌனமான கீழ்ப்படிதல், நம்பிக்கையுடன் ஏற்றுக் கொள்ளப்பட்ட பொறுப்பு, மற்றும் அன்றாட உழைப்பின் வழியாகவே நிகழ்கிறது. இவ்வாறு, யோசேப்பு, மீட்பின் வரலாற்றின் மனித பரிமாணத்தை நமக்கு வெளிப்படுத்தும் உயிருள்ள சாட்சியாக நிற்கிறார்.

**தாவீதின் வாக்குறுதியும் யோசேப்பின் சட்டப்பூர்வ தந்தைத்துவமும்**

மத்தேயு நற்செய்தியின் தொடக்கத்தில் காணப்படும் தலைமுறை அட்டவணை பலருக்குச் சலிப்பூட்டும் பெயர் பட்டியலாகத் தோன்றலாம். ஆனால் உண்மையில் அது மீட்பின் வரலாற்றின் சட்ட ஆவணம். அந்த பட்டியல், இஸ்ரயேலின் வரலாற்றை மட்டுமல்ல, கடவுளின் மீட்புத் திட்டம் மனித வரலாற்றில் எவ்வாறு சட்டபூர்வமாக நுழைகிறது என்பதையும் பதிவு செய்கிறது. அந்த நீண்ட வரிசையின் இறுதியில் நிற்கும் மனிதன் யோசேப்பு. அவர் ஒரு அரசர் அல்ல. அவர் ஒரு இறைவாக்கினர் அல்ல. ஆனால் அவர், மீட்பின் சட்டத் தொகுப்பாக நிற்கிறார்.

தாவீதுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதி, அரசியலா? மீட்பா? பழைய ஏற்பாட்டில் தாவீதுக்கு கடவுள் அளித்த வாக்குறுதி, ‘‘உன் சந்ததி என்றும் நிலைக்கும்’’ இது வெறும் அரசியல் வாக்குறுதி அல்ல. இது ஒரு வம்சத்தின் அதிகாரத் தொடர்ச்சிக்கான உறுதி மட்டும் அல்ல. இது மீட்பருக்கான வாக்குறுதி. தாவீதின் அரியணை, காலப்போக்கில் அரசியல் ரீதியாக வீழ்ந்தாலும், அந்த வாக்குறுதி மறையவில்லை. அது அரசியல் வரலாற்றைத் தாண்டி, மீட்பின் வரலாற்றுக்குள் நகர்கிறது. இதுவே மத்தேயு நற்செய்தியின் வம்ச வரிசையின் அடிப்படை நோக்கம்.

**கன்னிப் பிறப்பும் சட்ட அங்கீகாரமும்**

யூத மரபில், தந்தையின் சட்ட அங்கீகாரம் இல்லாமல் ஒருவர் சமூகத்தில் இடம் பெற முடியாது. வம்சம், உரிமை, மரபு இவை அனைத்தும் தந்தையின் வழியே வழங்கப்பட்டன. இங்கேயே யோசேப்பின் பங்கு தீர்மானகரமாகிறது. இயேசு உயிரியல் ரீதியில் யோசேப்பின் மகன் அல்ல. ஆனால் சட்ட ரீதியில், சமூக ரீதியில், வரலாற்று ரீதியில் அவர் யோசேப்பின் மகன்.

யோசேப்பு குழந்தைக்கு ‘‘இயேசு’’ என்று பெயரிடும் தருணம் ஒரு சாதாரண குடும்ப நிகழ்வு அல்ல. அது ஒரு சட்டச் செயல். ஒரு தந்தை உரிமையின் அறிவிப்பு. அந்த ஒரே செயலில், யோசேப்பு தாவீதின் வம்சத்தை இயேசுவுக்கு வழங்குகிறார். தன் பெயரையும், தன் மரபையும், தன் சமூக அடையாளத்தையும் குழந்தைக்கு ஒப்படைக்கிறார். தன் வாழ்க்கை முழுவதையும் இந்தக் குழந்தையின் எதிர்காலத்துக்காக அர்ப்பணிக்கிறார். அவர் பேசவில்லை. ஆனால் அவர் செய்த செயல், வரலாற்றை மாற்றுகிறது.

இதன் மூலம் நிகழ்வது, யோசேப்பின் சட்டப்பூர்வ தந்தைத்துவத்தின் வழியாக இறைவாக்கு நிறைவேறுகிறது. தாவீதின் வாக்குறுதி காலத்திற்குள் வருகிறது. வரலாறு மீட்புடன் இணைக்கப்படுகிறது. அரசியல், சமூக வரலாறு, தெய்வீக மீட்பின் கருவியாக மாறுகிறது. கடவுளின் வாக்குறுதி மனித சட்டத்தில் நுழைகிறது. இதுவே கிறிஸ்தவ நம்பிக்கையின் தனித்துவம். கடவுள் சட்டத்தை அழிக்கவில்லை அதை உள்ளிருந்து நிறைவேற்றினார்.

**கனவுகளின் வழி கடவுளின் வழிநடத்தல்: உள்ளார்ந்த கீழ்ப்படிதல்**

மத்தேயு நற்செய்தி 1:19-ல் யோசேப்பு ‘‘நீதிமான்’’ என அழைக்கப்படுகிறார். விவிலியத்தில் இந்த ஒரு சொல், யோசேப்பின் முழு ஆளுமையையும் ஒரே நேரத்தில் வெளிப்படுத்துகிறது. அது வெறும் சட்டக் கீழ்ப்படிதலைக் குறிக்கவில்லை; அது கடவுளின் இதயத்தோடு ஒத்திசையும் வாழ்க்கை முறையைக் குறிக்கிறது. நெறி சிக்கலில் நிற்கும் மனிதனாக யோசேப்பு திகழ்கின்றார். மரியாளின் கர்ப்பம் யோசேப்பை ஒரு மிகக் கடினமான நெறி மற்றும் ஆன்மீக சிக்கலில் நிறுத்துகிறது. அவருக்கு முன் இரண்டு பாதைகள் இருந்தன.

**சட்டத்தின் எழுத்து வழி** – மரியாளை பொதுவில் குற்றம் சாட்டுதல், அவமானப்படுத்துதல், சமூகத் தீர்ப்புக்குள் தள்ளுதல்.

**கருணையின் வழி**– அவளின் மரியாதையைப் பாதுகாத்தல், அமைதியாக விலகுதல், அவளுக்கு உயிரும் மரியாதையும் காக்கும் இடம் அளித்தல்.

யூதச் சட்டத்தின் படி, யோசேப்பு முதற் பாதையைத் தேர்ந்தெடுத்திருந்தால், அவர் ‘‘சரியானவன்’’ என்று கருதப்பட்டிருப்பார். ஆனால் விவிலியம் அவரை ‘‘நீதிமான்’’ என்று அழைப்பதற்கு காரணம் அவர் அந்தச் சட்ட உரிமையைப் பயன்படுத்த மறுத்தார். யோசேப்பு தேர்ந்தெடுத்தது.

**அமைதி** – குற்றச்சாட்டுகளின் சத்தத்தை அவர் உருவாக்கவில்லை.

**மரியாதை** – ஒரு பெண்ணின் வாழ்க்கையை, எதிர்காலத்தை, அவள் மனித மதிப்பை அவர் காத்தார்.

**கருணை** – தன்னைப் பாதித்ததாகத் தோன்றிய நிலையிலும், மற்றவரை நசுக்க மறுத்தார்.

இது பலவீனம் அல்ல. இது தன்னடக்கத்தின் உச்சம். இது ஆன்மீக வலிமை. சட்டத்தின் எழுத்தும் அதன் சாரம்சமும். யோசேப்பு சட்டத்தை அறியாதவர் அல்ல. ஆனால் அவர் சட்டத்தை அதன் சாராம்சத்தை புரிந்தவர். சட்டத்தின் எழுத்து மனிதனைத் தண்டிக்கலாம். ஆனால் சட்டத்தின் உள்ளார்ந்த நோக்கம் உயிரைக் காப்பதும், உறவுகளைப் பாதுகாப்பதும், கடவுளின் இரக்கத்தை பிரதிபலிப்பதும் ஆகும். யோசேப்பு இங்கே ஒரு இறைவாக்கினராக மாறுகிறார். ஆனால் வார்த்தைகளால் அல்ல,

செயலால். இயேசுவின் போதனையை முன்பே வாழ்ந்த மனிதன்.

யோசேப்பு, காலத்தில் பிறக்காத போதனையை, வாழ்க்கையில் முன்பே வாழ்ந்து காட்டுகிறார். பின்னர் இயேசு கூறவிருக்கும் வார்த்தைகள். ‘‘பலியல்ல, இரக்கமே நான் விரும்புகிறேன்.’’ இந்த வார்த்தைகள், முதலில் ஒலித்த இடம் யோசேப்பின் அமைதியான தீர்மானமே. அவர் சட்டத்தின் பலியைத் தேர்ந்தெடுக்கவில்லை; அவர் இரக்கத்தைத் தேர்ந்தெடுத்தார். உண்மையான நீதியின் இயல்பு இந்த நிகழ்வு நமக்கு ஒரு ஆழமான உண்மையை கற்றுத்தருகிறது.

உண்மையான நீதி மனிதனை நசுக்காது அதை காக்கும். நீதி என்பது மற்றவரின் வீழ்ச்சியில் வெற்றி காண்பது அல்ல. நீதி என்பது, தன் உரிமையைத் துறந்து, மற்றவரின் உயிரையும் மரியாதையையும் பாதுகாப்பது. யோசேப்பு ஒரு மௌன மனிதன். ஆனால் அந்த மௌனம், கருணையால் நிரம்பிய நீதிமையின் குரல். யோசேப்பு எதிர்காலத்தை அறிய முயற்சிக்கவில்லை. அவர் நம்பிக்கையை கட்டுப்பாட்டின் கருவியாக மாற்றவில்லை. அவர் நம்பிக்கையை கீழ்ப்படிதலின் செயல் ஆக மாற்றினார்.

இது அறியாமையா? இல்லை, நம்பிக்கை. யோசேப்பு சிந்திக்காத மனிதன் அல்ல. ஆனால் அவர் ஒரு ஆழமான உண்மையை அறிந்திருந்தார். கடவுளின் அழைப்புக்கு, முழு விளக்கமும் முன்பே கிடைக்காது. நம்பிக்கை என்பது அனைத்தையும் புரிந்து கொண்டு நடப்பது அல்ல. அது புரியாத நிலையிலும் நடக்கத் தயாராக இருப்பது. யோசேப்பு, தன்னைச் சுற்றியுள்ள துன்பங்களை அறிந்தே செயல்படுகிறார். எகிப்துக்குச் செல்வதில் பாதுகாப்பு இல்லை. திரும்பி வருவதில் உறுதி இல்லை. சமூகத்தில் அவரது நற்பெயர் ஏற்கனவே பாதிக்கப்பட்டுள்ளது. ஆனால் அவர் கணக்கிடுவது, பாதுகாப்பை அல்ல, கடவுளின் குரலை.

**உள்ளார்ந்த கீழ்ப்படிதலின் தத்துவம்**

யோசேப்பின் கீழ்ப்படிதல் இயந்திரத்தனமானது அல்ல. அது விழிப்புணர்வுடனானது. அது பயத்தில் பிறந்தது அல்ல; நம்பிக்கையில் பிறந்தது. இதுவே ‘‘உள்ளார்ந்த கீழ்ப்படிதல்’’. வெளிப்புற கட்டளை இல்லை. சமூக ஆதரவு இல்லை. உடனடி பலன் இல்லை. ஆனால் உள்ளத்தில் தெளிவு உள்ளது. நம்பிக்கையின் தூய வடிவம். யோசேப்பின் வாழ்க்கை நமக்கு நம்பிக்கையின் தூய வடிவத்தை கற்றுத்தருகிறது. நம்பிக்கை என்பது முழுத் திட்டத்தை அறிதல் அல்ல. அடுத்த அடியை எடுப்பதே. நாளைய பாதை தெரியாமலேயே, இன்றைய அழைப்புக்கு ‘‘ஆம்’’ என்று சொல்வதே நம்பிக்கை. பின்னர் இயேசு தம் சீடர்களிடம் கேட்கவிருக்கும் கீழ்ப்படிதலை, யோசேப்பு மௌனமாக, முன்னமே வாழ்ந்து காட்டுகிறார்.

யோசேப்பு நமக்கு கற்றுத்தருவது இதுதான். கடவுள் எப்போதும் சத்தமாக பேசுவதில்லை. ஆனால் அவர் பேசும் போது, அதற்கு உடனடி பதில் அளிக்கத் தயாராக இருக்கும் இதயம் தேவை. அந்த இதயம் யோசேப்புக்கிருந்தது.

யோசேப்பு ஒரு மாற்று மனித வடிவத்தை முன்வைக்கிறார். அவர் தன்னை விளக்கவில்லை, அவர் தன்னை நியாயப்படுத்தவில்லை, அவர் குற்றச்சாட்டுகளுக்கு பதில் சொல்லவில்லை. அவர் அமைதியை வலிமையாக்குகிறார். அமைதி, தன்னடக்கத்தின் உச்சம். அமைதியாக இருப்பது எளிதல்ல. அது தன்னடக்கத்தை வேண்டுகிறது. அது தற்பெருமையின் மரணத்தை வேண்டுகிறது. யோசேப்பு பேசாமல் இருப்பதன் மூலம், தன்னை மையத்திலிருந்து அகற்றுகிறார், கடவுளின் செயலை மையமாக வைக்கிறார். இதுவே உண்மையான ஆன்மீக வலிமை. யோசேப்பின் வாழ்க்கை ஒரு ‘‘பேசாத நற்செய்தி’’. அவர் சொல்லாமல் சொல்வது கடவுள் நம்பத்தகுந்தவர். அவரது திட்டம் விளக்கத்திற்காக அல்ல. கீழ்ப்படிதலுக்காக மனிதன் எல்லாவற்றையும் கட்டுப்படுத்த வேண்டியதில்லை. அவர் அமைதியாக வாழ்ந்து காட்டும் விசுவாசம், பல உரைகளைக் காட்டிலும் வலிமையானது. கடவுளின் முன்னிலையில் நிற்பது யோசேப்பின் அமைதி நமக்கு கற்றுத்தரும் அடிப்படை பாடம் இதுதான். கடவுளின் முன்னிலையில் அமைதியாக நிற்பதே உண்மையான வலிமை. அமைதியாக நிற்பது, எல்லா பதில்களும் இல்லாவிட்டாலும் நம்புவது, புரியாத நிலையிலும் கீழ்ப்படிதல் தன்னை விட பெரிய செயலில் தன்னை ஒப்படைத்தல் இதுவே நம்பிக்கையின் உச்ச வெளிப்பாடு.

முடிவுரை:

அமைதியான ‘‘ஆம்’’ வரலாற்றை மாற்றிய சக்தி மீட்பின் வரலாறு பெரிய உரைகளால் அல்ல. அமைதியான கீழ்ப்படிதலால் நகர்ந்தது. அந்த கீழ்ப்படிதலின் பெயர் புனித யோசேப்பு. அவர் பேசவில்லை; ஆனால் வரலாறு மாறியது. அவர் முன்னிலையிலில்லை; ஆனால் மீட்பு பாதுகாக்கப்பட்டது. புனித யோசேப்பு நமக்கு கற்றுத்தரும் பாடம் இதுவே. அமைதியான ‘‘ஆம்’’ கூட உலகின் வரலாற்றை மாற்றும்.

# நல்லுறவு

அருள்பணி. முனைவர் **ஏ. எம்மா சே.ச.**

தமிழ்நாட்டில் இருக்கும் ஒரு குடும்பத்தில் தந்தையும் தாயும் பெரிய பணக்காரர்களாக இல்லாவிட்டாலும், கடின உழைப்பாளிகள். தியாகமே அவர்களின் மறுபெயர். தங்களுடைய வசதிக்கென்று எதையும் சேர்த்து வைக்காமல், அனைத்தையும் தன்னுடைய மகன், மகள் – இருவருக்கும் செலவு செய்தார்கள். மகளைப் படிக்க வைத்து வேலைக்கு அனுப்பினார்கள். வேலை பார்த்துக் கொண்டிருக்கும் போது, தன்னோடு வேலை செய்த ஒருவரைக் காதலித்துத் திருமணம் செய்து கொண்டாள். திருமணம் ஆனதிலிருந்து, அம்மா அப்பாவைக் கண்டு கெள;வதில்லை. தனக்கு ஏதாவது தேவையிருந்தால் அலைபேசியில் அழைத்து, வேண்டியதை வாங்கிக் கொள்வாள். தன்னுடைய சம்பளத்திலிருந்து ஒரு பைசா கூட அம்மா அப்பாவுக்குக் கொடுப்பதில்லை.

பொருளாதாரக் கஷ்டம் இருந்தாலும், ஆங்கில வழிக் கல்வியில் பயில வேண்டுமென நிறைய பணம் செலவு செய்து மகனைப் படிக்க வைத்தார்கள். தமிழ்நாட்டிற்கு அருகிலுள்ள மாநிலத்தில் நல்ல வேலையில் சேர்ந்தான். பிறகு அமெரிக்கா செல்ல வேண்டுமென்று அம்மா அப்பாவிடம் பணம் கேட்டு நச்சரித்தான். தாங்கள் வைத்திருந்த வீடு, மற்ற பாரம்பரியச் சொத்துக்கள் அனைத்தையும் விற்று மகனுக்கு உதவினார்கள். எவ்வளவு கொடுத்தாலும், "காதல் திருமணம் செய்த உங்க மகளுக்கு எவ்வளவு செய்தீர்கள்?! எனக்கு என்ன பெரியதாகச் செய்து விட்டீர்கள்?! உங்களுடைய மகனுக்குச் செய்வதைச் சொல்லிக் காட்டாதீர்கள். உங்களுடைய கடமை முடிந்துவிட்டதாக நினைக்காதீர்கள்." என்று பெற்றோரைக் காயப்படுத்திக் கொண்டே இருப்பான். அமெரிக்கா சென்ற ஒரு வருடத்திற்குள் பெற்றோரை உதாசீனப்படுத்திவிட்டு, அவர்களிடம் பேசுவதைக் குறைத்துக் கொண்டான். பெற்றோர் தங்களுக்குச் சுகமில்லை, கொஞ்சம் பணம் தேவைப்படுகிறது என்று எப்போதாவது அவனுக்குத் தெரிவித்தால், அவன், "எனக்கு நிறைய வேலை இருக்கிறது. செலவும் இருக்கிறது. என்னைத் தொந்தரவு பண்ணாதீர்கள்," என்ற எரிந்து விழுவான். "எது வேண்டுமானாலும், இந்தியாவிலேயே இருக்கும் உங்கள் அன்பு மகளிடம் கேளுங்கள்" என்று சொல்லி அலைபேசித் தொடர்பை நிறுத்திவிடுவான்.

பெற்றோர்கள் தற்சமயம் ஏதாவதொரு வயது முதிர்ந்தோர் இல்லத்தில் தங்க பணம் இல்லையே என்று அங்கலாய்க்கிற நிலைமை. வளர்த்து ஆளாக்கிய மகனும் மகளும் தங்களைக் கைவிட்டுவிட்டார்களே என்ற எண்ணம் இருந்தாலும், அவர்கள் வழக்கமாகச் சொல்வது, "எங்க பிள்ளைங்க நல்லா இருந்தாப் போதும். மகனும் மகளும் ஒருவர் ஒருவர் மேல பொறாமை இல்லாம, சண்டை போடாமப் பேசிக்கிட்டாங்கன்னா நல்லாருக்கும். அவுங்களுடைய நலனுக்காகத் தினமும் ஜெபம் பண்ணிக்கிட்டே இருக்கிறோம்,"

மேலே குறிப்பிட்டுள்ள ஒரு குடும்பத்தின் உண்மை நிலையைப் பற்றி வாசிக்கிற போது, பைபிளில் சொல்லப்பட்ட ஊதாரி மகனின் உவமை உங்கள் ஞாபகத்திற்கு வரலாம். தந்தையின் சொத்து மட்டும் போதும், உறவு வேண்டாம் என்று ஒரு மகன் நினைக்க, இன்னொரு மகன், கடமைக்காகவும், தந்தையின் சொத்து முழுவதும் தனக்குக் கிடைப்பதற்காக நல்ல பெயர் வாங்குவதற்காகவும் உழைக்கிறவன். இரண்டு பேருமே தந்தையின் அன்புக்குத் தகுதியற்றவர்கள். நல்லுறவுக்காக, இறைவனுக்கே உரிய பரிவுள்ளத்தோடு ஆவலோடு காத்திருக்கும் தந்தையை ஒதுக்குகிறவர்கள்தாம் வாழ்வை இழப்பர். இறைவனைவிட்டுத் தள்ளிப் போகிறவர்கள் சக மனிதர்களையும் அயலார்களாகப் பார்க்கமாட்டார்கள். இறையன்பு, பிறரன்பு என்ற வாழ்க்கையின் இரண்டு கண்களையும் குருடாக்கி வாழ்ந்தால் யாருக்கு நஷ்டம்? சுயநலத்தில் வேரூன்றியவர்களாய், பிறரிடமிருந்து எவ்வளவு



வாங்க வேண்டுமோ, அவ்வளவையும் வாங்கிக் கொண்டு, நன்றியுணர்வே இல்லாமல் ஒதுங்கிப் போகிறார்களே. அவர்கள்தாம் ஊதாரி குழந்தைகள். நல்ல உறவின் மதிப்பையும் தேவையையும் உணராமல், தீனி போட்டு வளர்த்தவர்களையே கடிக்க வரும் பன்றிகளாகத் திரியும் மனநிலைக்கும் ஊதாரி குழந்தைகளுடைய மனநிலைக்கும் வேறுபாடு அதிகம் கிடையாது.

இறைவனோடு இருந்த உறவை முறித்துவிட்டு, அவருடைய சகவாசமே தேவையில்லை என்று தூரமாகப் போய், தனக்குள்ளேயே மகிழ்ச்சியைத் தேடுவது மனித இயல்பு. அவரால்தான் படைக்கப்பட்டோம், அவர் தரும் சக்தியால்தான் நாம் இயங்குகிறோம் என்ற நிஜத்தை மறந்துவிட்டு, அற்பக் கனவுகளில் மயங்குவதும் ஏமாறுவதும், திரும்பவும் மாயைகளின் பின்னால் ஏங்கி அலைவதும் நம்முடைய வாழ்க்கையாகிவிட்டது. பொறாமை, கோபம், வெறுப்பு, சண்டை சச்சரவு போன்றவைகளிலேயே வாழ்நாளைக் கழிக்கும் மக்கள் நிறையப் பேர் உண்டு. நல்லுறவை நிலைநாட்டுவதற்குத் தயாராக இல்லாமல், மகிழ்ச்சிக்காக ஏங்கினால், நம்முடைய முயற்சி வெற்றியடையுமா? முழுமையான நிறைவை நமக்குள்ளேயே அடைய முடியுமா?

சரி, என்னதான் செய்வது?! அபகரித்து வந்த சொத்தை எல்லாம் இழந்து, தன்னுடைய தாழ்நிலையில் உழன்ற ஊதாரி மகனைப் போல, இறைவனோடும் பிறரோடும் இருக்க வேண்டிய உறவு முறிந்து போயிருக்கிறது என்று நாம் முதலில் உணர வேண்டும். தாழ்ச்சியோடு, நம்முடைய தவறுகளுக்காக மனம் வருந்தி, மனதார மன்னிப்புக் கேட்கத் தயாராக இருக்க வேண்டும். இறைவனோடும் பிறரோடும் நல்லுறவை நிலைநாட்டுவதன் வழியாகத்தான் நாம் மகிழ்ச்சியை அனுபவிக்க முடியும். வளர்ச்சியின் உச்சியை அடைய முடியும். நம் வாழ்வின் பயனை அடைய முடியும் என்ற உண்மையை ஏற்றுக் கொள்ள வேண்டும். காட்டிக் கொடுத்த யூதாஸ் இஸ்காரியூத்தைப் போல சோகத்திலும் அவமானத்திலும் குற்ற உணர்விலும் மூழ்கி விடக்கூடாது.

முக்கியமாக, நாம் செய்ய வேண்டிய இன்னொன்றும் உண்டு: மனிதர்களாக இருப்பதினாலேயே நாம் தவறு செய்யக்கூடியவர்கள்தான் என்று புரிந்து கொள்ள வேண்டும். மறுதலித்த பேதுருவைப் போல, சந்தேகித்து அடம்பிடித்த தோமையாரைப் போல, கிறித்துவை நம்பிய மக்களையெல்லாம் கொடுமைப்படுத்திய பவுலைப் போல, ஏன் இன்னும் மோசமானவர்களாக நாம் வாழ்ந்திருந்தாலும், இறைவன் நம்மை மன்னித்து ஏற்றுக்கொள்வார் என்ற நம்பிக்கையில் நடைபோட ஆரம்பிக்க வேண்டும். இறைவனின் குழந்தைகளாக, முழுமையாக மன்னிக்கப்பட்டவர்களாக, இறைவனால் ஏற்றுக் கொள்ளப்பட்டவர்களாக, அவரது அன்பால் சூழப்பட்டவர்களாக நன்றியுணர்வை வளர்த்துக் கொள்ள வேண்டும். நம்மையே மன்னிக்கவும், நல்லுறவு இல்லாமல் இருண்டிருந்த நம்முடைய கடந்த காலத்தை அர்ச்சிக்கவும் தயாராக இருக்க வேண்டும். இந்த மனநிலைதான் நம்மோடும், பிறரோடும் இறைவனோடும் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும். உண்மையான மகிழ்ச்சியில்; திருமுழுக்குப் பெற்றவர்களாய் வாழ அழைக்கும். இதுதான் உயிர்ப்புக்குத் தகுதியுள்ளவர்களாகவும் நம்மை மாற்றும்.

# வெற்றி நமதே

ச. ஜெயராஜ்
உதவித் தொடக்கக்கல்வி அலுவலர் (ஓய்வு), சாலைக்கிராமம்

எனதருமை மாணவச் செல்வங்களே, பெற்றோர்களின் செல்வங்களே, இந்தியாவின் எதிர்காலத் தூண்களே, சிந்தனைச் சிற்பிகளே, முன்னோர்களின் முத்துக்களே, அப்துல் காலம் கண்ட கனவுகளே, தங்கங்களே நாளைய தலைவர்களே, சிங்கங்களே வாழும் தெய்வங்களே, மண்ணின் மாணிக்கங்களே, வையகத்தின் வைரங்களே, வளமையான பாரதத்தின் வைடூரியங்களே, பாசங்களே நேசங்களே, சொந்தங்களே பந்தங்களே, உங்களனைவரையும் இக்கட்டுரை மூலம் சந்திப்பதில் மகிழ்வுறுகிறேன்.

கல்வி ஆண்டின் கடைசிப் பருவத்தில் நின்று பத்து மற்றும் பன்னிரெண்டாம் வகுப்புப் பொதுத் தேர்வைச் சந்திக்க உங்களை நீங்களே தகுதியாக்கிக் கொண்டிருப்பீர்கள் என்று நம்புகிறேன்.

முதலில் நீங்கள் இறைவனுக்கு நன்றி சொல்ல வேண்டும். ஏனெனில் ஊரில் உங்களோடு பிறந்தவர்கள், உடன் விளையாடியவர்கள், பள்ளியில் படித்த தோழர்கள், தோழிகள் இவர்களில் ஒருசிலர் உங்களோடு படிக்கவில்லைதானே? காரணம் வறுமையின் வாட்டத்தால் கூலி வேலை செய்து பெற்றோர்களைக் காப்பாற்றச் சென்றிருக்கலாம், குடும்பச் சூழலில் சிக்கியதால் படிப்பைத் தொடர முடியாமல் போயிருக்கலாம், அல்லது உங்களோடு ஒரு சில குழந்தைகள் மரணித்திருக்கலாம். ஆனால் "கடவுள் உங்களைத் தேர்ந்துகொண்ட" (யோவான் 15:16) பத்தாம் வகுப்பில், பன்னிரெண்டாம் வகுப்பில் நிறுத்தியிருக்கிறார் என்றால் கடவுளின் செயல்தானே. அகல ஆழ உயரமாய் எவ்வளவோ அன்பு செய்து இன்றும் உச்சத்திற்கு அழைத்துச்சென்ற இறைவனுக்கு நன்றி செலுத்துகிறேன்.

கல்வி, உங்களையெல்லாம் மருத்தவராக்குகிறது. பொறியாளராக மாற்றுகிறது, ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ் அலுவலராக்குகிறது. ஆசிரியராக்குகிறது, ஆராய்ச்சியாளராக்குகிறது ஆனால் மனிதனாக மாற்றுகிறதா?... உங்களை நல்ல மாணவர்களாக, மனிதர்களாக மாற்றும்; எப்பொழுது? நீங்கள் கல்வியைக் கற்கும்பொழுது, கசடறக் கற்கும்பொழுது, கற்றபடி வாழும்பொழுது நீங்கள் மனிதர்களாகலாம்.

தேர்வுக்கான தயாரிப்பைத் தன்னம்பிக்கையுடன் தொடங்கிடுங்கள். சமூக நாட்களில், சினிமா களியாட்டங்களில் அக்கறைக்காட்டாமல் பாடங்களில் மட்டுமே ஆழ்ந்திருங்கள். அப்பொழுதுதான் காலமும், வாய்ப்புகளும் உங்களை அடுத்த நிலைக்கு நகர்த்திச் செல்லும். தேர்வுக்காகச் செலவிடுகின்ற ஒவ்வொரு நொடியும் உங்களை அடுத்த படிநிலைக்குக் கொண்டு செல்லும்.

சமூக ஊடகங்களும் முகநூல், புலனப் பதிவுகளும் மலிந்துகிடக்கும் நவீன யுகத்தில் முகநூலில் தலைகுனிந்து உங்கள் முகத்தைப் பதிக்காதீர்கள். அது உங்கள் வாழ்க்கையைப் பாதிக்கும், உங்கள் தேர்வுகளைச் சோதிக்கும். புலனப் பதிவுகளில் உங்கள் புலன்களை அடக்கி வையுங்கள். அது உங்கள் கால்களில் வெற்றிக் கனிகளைக் கொண்டுவந்து சேர்க்கும். நிழல்களைக் கண்டு ஏமாந்து நிஜமாக்கிக் கல்வியின் மூலம் கிடைக்கும் வெற்றி மட்டுமே நிரந்தரமானதாகும். பார்வையும் நிமிரும், எண்ணங்கள் மிளிரும், வாழ்க்கை ஒளிரும்.

திரைப்பட நடிகர், நடிகைகள் உங்களை மயக்குவதற்காக பல கவர்ச்சித் தோற்றங்களில் சமூக ஊடகங்களில் நிழலாடக் கூடும், அதைப்பார்க்க மனம் ஓடும், பார்க்க முடியவில்லையென்றால் உள்ளம் வாடும், எண்ண ஓட்டம் தேடும். அதற்கெல்லாம் அடிமையாகிவிட வேண்டாம். அவர்களின் மாயபிம்ப வலையில் சிக்கி உங்களை நீங்களே சின்னாபின்னமாக்கிக்கொள்ள வேண்டாம்.

உங்கள் இலக்கு தேர்வை நோக்கி மட்டுமே உயர்ந்து நிற்கட்டும். உயர்வானதை மட்டும் நினைக்கும் உங்கள் உள்ளமும் உயரிய பாதைக்கு இட்டுச் செல்லும், வாழ்க்கையும் வெல்லும்.

"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்" (குறள் : 666)

என்ற வள்ளுவரின் ஏழு

வார்த்தைகளையும் வாழ்வாக்கிய மாமனிதர் அப்துல் கலாம் அவர்களின் புகழ் ஏழு கடல்களையும் தாண்டி உலகமனைத்திலும் பரவியது போல் உங்கள் புகழும் உயரும். நீங்கள் கற்கும் கல்வி ஊண், உயிர், உள்ளொலி அதாவது உடல், உள்ளம், ஆன்மா, அனைத்தையும் உள்ளடக்கி உங்கள் இலட்சியப் பாதைக்கு ஊன்றுகோளாய் அமையட்டும்.

கல்விப் பயணத்தில் யாருக்காவது தோல்வி ஏற்பட்டால் துவண்டுவிட வேண்டாம். வேறு வேறு தவறான முயற்சிகளில் ஈடுபடுத்திக்கொள்ள வேண்டாம். உங்களுக்கென உடனடித் தேர்வுகள், துணைத் தேர்வுகள் நடைபெறுகின்றன. அவற்றில் வெற்றிபெற்று அந்தக் க ல்வி ஆண்டிலேயே உயர்கல்வியைத் தொடர அரசு ஆயிரம் வசதிகள் செய்துகொடுக்கிறது.

எனவே தோல்வியே வெற்றிக்கான முதல்படி என நினைத்து துணிச்சலுடன் பயணியுங்கள். சோம்பிக் கிடந்தால் சிலந்திப் பூச்சி கூட உங்களைச் சிறைப்பிடித்துவிடும். உறங்கிக் கிடந்தால் கொசுகூட உங்களைக் கிரங்கடித்துவிடும். முடங்கிக் கிடந்தால் எறும்புகூட உங்களை வீழ்த்திவிடும். எழுங்கள் எரிமலையாய் வீறுகொண்டு, அப்போதுதான் உங்கள் உயரம் உங்களுக்கே புரியும், உங்களுடைய திறமை உங்களுக்கே தெரியும்.

மாணவர்களே உங்களுக்கு ஒன்று தெரியுமா? எழுபதுகளில் நாங்கள் பார்க்கும்பொழுது பழைய பதினொன்றாம் வகுப்புப் பொதுத்தேர்வில் தோல்வியடைந்தால் அதாவது ஒருபாடத்தில் தோல்வியடைந்தால் கூட மறுவருடம் பதினொன்றாம் வகுப்பில் சேர்ந்து படித்து அனைத்துப் பாடங்களையும் மறபடியும் தேர்வு எழுத வேண்டும். இரண்டு முறை, மூன்று முறை தோல்வி அடைந்தவர்களெல்லாம் உண்டு. திருமணம் முடிக்கின்ற வயதில்கூட பதினொன்றாம் வகுப்பு படித்தவர்கலெல்லாம் உண்டு. அவர்கள் தோல்வியைக் கண்டு தற்கொலையில் ஈடுபடவில்லை, மாறாக எழுந்து, எரிமலையாய் நடந்து கரடு முரடான பாதைகளைத் கடந்து, பல நாட்கள் பட்டினி கிடந்து உணவகங்களில் பாத்திரம் கழுவி, மேசை துடைத்து, உணவு பரிமாறுகிறவராய், பில் எழுதுகிற கணக்காளராய், காசாளராய் இன்றும் பல உணவகங்களுக்கு நிறுவனராய் அதிபராய்த் திகழ்கிறார்கள். பல தொழிலதிபர்கள், நகைக்கடை உரியாளர்கள், துணி உற்பத்தித் தொழிற்சாலை அதிபர்களால் இன்றும் நம்மோடு வாழ்ந்து வரலாறு படைத்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

ஆம், மாணவர்களே உங்களுக்கும் ஆயிரமாயிரும் வாய்ப்புகள் காலடியில் மண்டியிட்டுக் கிடக்கின்றன. சரியான நேரத்தில் சரியான திசையில் வருகின்ற வாய்ப்புகளைப் பயன்படுத்திக்கொள்ளுங்கள். உங்கள் தகுதிக்கேற்ற போட்டித் தேர்வுகளை எழுதி வெற்றி பெறுங்கள். தேர்வுகள் உங்களை உயரப்படுத்தும்.

ஏனென்றால் வெற்றி தன் வருகையைத் தோல்விகளைத் தூதனுப்பியே முன்னறிவிக்கிறது. மகுடம் சூடியவர்கள் தலைமட்டுமே தங்கத்தால் அலங்கரிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் பாதங்கள் பயணித்ததெல்லாம் கற்களிலும் – முற்களிலும்.

தோல்விகளின் பாடம் வெற்றிகளை நிரந்தரப்படுத்தும். தோல்விகளின் பயம்தான் வெற்றிகளை அந்நியப்படுத்தும்.

வெற்றியைவிட தோல்வியை நேசியுங்கள். வெற்றி முன்னேற்றத்தைத் தடுத்து சோம்பலைத் தரும். தோல்விகள் மட்டுமே ஏக்கங்களைக் குவித்து இலக்கை விரிவடையச் செய்யும்.

கல்வியில் தோல்வியோ, வேலையில் தோல்வியோ தோல்வியல்ல. வெற்றிக்காக நடத்தப்படும் வேள்விகள்.

அடிவிழ அடிவிழ கல்கூட சிலையாகிறது. நடக்க நடக்க முள்காடு பாதையாகிறது, சுடச்சுடத்தான் தங்கம் கூட ஒளிர்கிறது. வெற்றியும் அப்படித்தான். அது மாயாசாலத்தில் மடங்குவதில்லை, ஓயா உழைப்பிற்கு ஓடிவரக்கூடியது.

தளரா மனம் மட்டுமிருந்தால் தங்கக் கிரீடங்கள் தலையில் சூடலாம் வாருங்கள் – வெற்றி நமதே.

# "கிறிஸ்துவின் மதிப்பீடுகளில் லெவே அடிகளாரின் புனிதம்"

✍ அருட்பணி. **செ. லூர்து ராஜ்**
பங்குத்தந்தை, திரு இருதயங்களின் ஆலயம், சருகணி

**முன்னுரை :**

உலகில் ஒவ்வொரு மனிதரும் சமமாக வாழ்வதற்கான உரிமையுடையவர். ஆனால் சமூக அமைப்பில் கடைநிலை மக்களும், ஒடுக்கப்பட்டோரும் கல்வியிலும், பொருளாதாரத்திலும், சமூக மரியாதையிலும் பின்தங்கியிருக்கின்றனர். இத்தகைய சமயத்தில் இயேசு கிறிஸ்துவின் போதனைகளான "அன்பு", "பகிர்வு", "சேவை","மன்னிப்பு" ஆகிய நெறிகள் இந்த மனித நலப் பணிக்கு திசை காட்டுகின்றன.



மனித வாழ்வை மேம்படுத்தும் பணிகளில் தன்னை முழுமையாக அர்ப்பணித்த லெவே அடிகளாரின் வாழ்வில் புனிதம் மிளிர்கின்றது. அவரது வாழ்க்கை "அன்பும் சேவையும்" என்ற இரண்டு தூண்கள் மேல் தழைத்து நின்றது.

அடிகளார் கிறிஸ்துவின் போதனையை உள்வாங்கி, தன்னை "ஒடுக்கப்பட்டோரின் தோழன்" எனக் கருதி வாழ்ந்தார். சமத்துவம், அன்பு, கருணை, மனிதநேயம் ஆகியவற்றையே உயர்ந்த மதிப்பீடாக வைத்தார். அந்த மதிப்பீடுகள் ஒடுக்கப்பட்டோரின் மனதில் நீங்கா நினைவலைகளாகத் திகழ்கின்றன.

**1. சொல்லில் வலிமை ; செயலில் மேன்மை**

லெவே அடிகள் சொல்வது போல் செயலில் மேன்மை விளங்கும். சொல்லால் மட்டுமல்ல, அவர்தம் தியாகத்தில் அவரின் புனிதம் வெளிப்பட்டது.

**பணியில் பணிவு :**

மக்களுக்காக பணிவுடன் உழைத்தார். "நான் கடவுளின் கருவி" என்று வாழ்ந்தவர்; கடமையைத் தியாகமாக மாற்றியவர். அலங்கார பணி செய்யவில்லை; புனிதமாகவும், சலிப்பில்லாமலும் செய்த பணி அவரின் புனிதத்தை காட்டுகிறது. இவரின் புனித வாழ்வு மக்களுக்கு வெளிச்சமாக பிரகாசித்தது. போதனையை சாதனையாக அவரின் வாழ்வு அமைந்திருந்தது. செயலின் மொழியே திருமொழி.

**2. ஏழை மக்களே என் மக்கள்**

தந்தை லெவே ஏழை மக்களை தூரத்தில் நிற்கும் ஒரு சமூகமாக பார்த்ததே இல்லை. "ஏழை மக்கள் என் மக்கள்" என்று இதயத்தில் உறுதியாக கூறிய தருணத்திலேயே அவர் வாழ்க்கையின் பாதை புனிதத்திற்கு திரும்பியது. அவர் பார்த்த ஒவ்வொரு ஏழையிலும் இயேசுவின் முகத்தை கண்டார். பசியோ, நோயோ, துயரோ அனைத்தும் தந்தையவர்களுக்கு இறைவனின் அழைப்பு போல இருந்தது.

❖ ஏழைகளோடு பேசுவதால் மட்டுமல்ல. அவர்களின் துயரை, தன் தோளில் சுமந்ததால் அவரின் சேவை ஒரு புனித மொழியாக மாறியது.

❖ ஏழை மக்களை தன்னுடையவர்களாகக் கொண்டதால் அவர்களுக்கு கொடுத்த அன்பு நேராக இறைவனை அடையும் பாதை ஆயிற்று. விவிலியம் கூறுவதுபோல் "எனக்கே செய்தீர்கள்" என்ற இறைவாக்கு, அவர் மக்களுக்கு பணிபுரிந்ததில் மிளிர்ந்தது.

**மக்கள் நேசித்த மகான் - மனித மனங்களில் என்றுமே வாசம் :**

மக்களை நேசித்த தந்தை லெவேயின் வாழ்க்கை சாவால் முடிவடையாது. அவர் உடல் மண்ணில் கலந்தாலும். அவர் செய்த எண்ணற்ற நன்மைகளால் மக்களின் நெஞ்சங்களில் நீங்காத நினைவலையாய் வலம் வருகிறார்.

❖ அன்பு கொண்டவரின் வாழ்க்கைக்கு முடிவு கிடையாது.

❖ பிறர் துயரத்தை தம் துயரமாகக் கொண்டு, அவர் விதைத்த அன்பினால் ஒவ்வொரு

நெஞ்சிலும் ஒரு உயிராகவே தொடர்ந்து வாழ்கிறார்.

❖ செய்த சேவையை மரணம் அழிக்காது; அழிக்க முடியாது, நோயளிகளுக்கு மருந்தாகவும், ஏழைகட்கு முதல் நம்பிக்கையாகவும், கல்வியில்லா குழந்தைக்கு தூண்டுதலாகவும் வாழ்ந்தவர். தன்னுயிரை மட்டும் இழக்கிறார். ஆனால் அவர்தம் அன்பு பல ஆயிரக்கணக்கான உள்ளங்களில் பதிந்து விடுகிறது.

❖ நினைவாக அல்ல விளக்காக வாழ்கிறார். "அவர் இன்றும் நம்மோடு உள்ளார்" என்று உணர்கிறார்கள். காரணம் அவர் காட்டிய மனிதநேயம் அவர்களை, அவர்களின் வாழ்வை மாற்றத் தூண்டுகிறது.

❖ சிறந்த வாழ்க்கை மரணத்தை வெல்லும் தந்தை வாழ்வில் தூய்மை, தியாகம், கருணை, இவையனைத்தும் காலத்தால் அழிக்கப்படாத அடையாளங்கள். மண்ணில் கலந்த உடல் மட்டும் மறைந்துபோகும். ஆனால் மனிதர்களின் இதயங்களில் அவர் நிலையாக வாழ்கிறார். அவரின் ஆன்மாவின் ஒளி எண்ணற்ற மனங்களில் தினமும் ஒளிர்ந்து கொண்டே இருக்கிறது.

**4. மறை போதகத்திற்காக இந்தியாவுக்கு வந்தவர் மக்களை நேசிப்பதில் மகிழ்ச்சி கண்டார்.**

❖ லெவே தந்தை மக்களிடம் பெறுவதில் இல்லை, கொடுப்பதில் மகிழ்ச்சி கண்டார். அன்பு அவர் உள்ளத்தில் இருந்து இயல்பாக வரும். ஒருவர் சிரித்தால் அதைவிட பெரிய வெகுமதி அவருக்கு இல்லை.

❖ தனது உதவியினால், பிறர் பயன்பெறும்போது, மிகுந்த மகிழ்ச்சியடைந்தார். அவருடைய ஆன்மாவின் இயல்பே அன்பு செய்வதுதான். மக்கள் மனம் மகிழ்வு கொள்ளும் போது அவரும் உள்ளார்ந்த மகிழ்ச்சியடைகிறார்.

❖ சிறு உதவியிலும் கூட மிகுந்த மகிழ்ச்சிபெற்றார். ஒருபசியாளன் வயிறு நிறைந்தால்; ஒரு குழந்தை எழுத்துக்கற்றால், ஒரு நோயாளன் குணமானால் அந்தப்புதுமையான மகிழ்ச்சி அவருடைய கண்களை ஒளிர வைத்தது.

❖ அவருடைய அன்பிற்கு எதிர்பார்ப்பு இல்லை "நன்றி" கிடைக்காவிட்டாலும், பிறருக்கு செய்யும் நன்மையில் அவர் விண்ணகத்தை கண்டார்.

❖ மக்களின் தேவைகளை நிறைவு செய்து மகிழ்ச்சி கண்டவர். வார்த்தைகள் இன்றி செயலின் வழியே கடவுளின் முகத்தை அவர் மக்களுக்கு காட்டினார்.

❖ அவர் சென்ற இடங்கள் அனைத்தும் ஒளியை பரவிய தளங்களாக மாறின.

**5. மக்களின் சேவை மகேசனின் சேவை**

யாருக்கும் தெரியாமல் உதவி செய்யும் பண்புள்ளவர். ஏழை ஒருவர் துன்புற்றால் அவருக்கு பெரிய அழைப்பு. அந்த மனிதரின் முகத்தில் அவர் இறைவனின் உருவத்தை கண்டார்.

* யாருடைய பாராட்டையும் எதிர்பார்க்கும் பண்பு அவரிடம் இல்லை. எழுதாமல் சொல்லும் கைதான் புனிதம். அதுபோல் அவர் செய்த உதவிக்கு அவர் பெயர் எழுதப்படவில்லை. ஆனால் சென்ற வீடுகளின் வரலாற்றில் அவர் பெயர் நிலைத்திருந்தது.

* ஒரு குடும்பம் பசியால் தவித்தால் அவர் அமைதியாக இரவில் சென்று கதவின்முன் உணவுக்கானதை வைத்துவிட்டு வந்திடுவார். "யார் கொடுத்தது" என்று யாரும் அறியவில்லை ஆனால் கடவுளின் அன்பு வந்தது என்பதை மட்டும் அனைவரும் உணர்ந்தனர்.

* உதவியை மறைத்து செய்யும் அந்த பணிவு அவரின் உள்ளார்ந்த புனிதத்தை மேலும் உயர்த்தியது. இயேசு கூறியதுபோல்.

"**உன் வலக்கை செய்வதை இடது கை அறியாமல் இருக்கட்டும்**" என்பதின்படி வாழ்ந்தவர் தந்தை லெவே.

**6. ஆழமான இறைவேண்டலும், விசுவாசமும் அற்புதங்களை நிகழ்த்தும் தந்தை லெவே**

அவரின் வாழ்க்கையின் மிகப்பெரிய சக்தி சொல்லிலும், அறிவிலும் மட்டுமல்லாது ஆழமான இறைவேண்டலும், தளராத விசுவாசத்திலும் தான் இருந்தது.

❖ எந்தவொரு செயலுக்கும் முன் ஜெபம், எந்தவொரு உதவிக்கும் முன் இறைவேண்டல் அதன்பின்பே செயலாற்றுவார். அவருக்கு ஜெபமே சுவாசமாயிருந்தது. அதுவே மக்களுக்கு வாசமாய் இருந்தது.

❖ லெவே தந்தையில், இறைத்தந்தை, இயேசுவின் பிரசன்னம் ஒளிர்ந்ததால்; இறைவனை முழுமையாக நம்பியதால் மனித முயற்சியைத் தாண்டி அற்புதங்களை நிகழ்த்தும் சக்தியைக் கொடுத்தது.

❖ அவருடைய ஜெபம் காயங்களை ஆற்றும் மருந்தாயிற்று. நோயால் நொந்தவர்கள் அவரிடம் வந்தால் அவர் மருந்தை விட இறைவனின் ஆற்றலை அவர்களுக்காக வேண்டும்போது அனைவரும் குணம் பெற்றனர். அது அவரின் திறமை அல்ல, அவரின் விசுவாசத்தின் பலனே.

❖ சிக்கலில் இருந்த குடும்பங்களுக்கு இவர் அற்புத மாற்றங்களை ஏற்படுத்தினார். மக்கள் இவரை அற்புதம் செய்வதில் வல்லவர் என்று கூறுகையில் அவர் அதை "**இறைவனின் செயல்**" எனத்தாழ்மையுடன் கூறுவார்.

❖ தந்தை லெவேயின் விசுவாசம் மலைகளை கூட அசைத்தது.

❖ வளம் இல்லாத இடத்தில் வளம்

❖ பலம் இல்லாத இடத்தில் பலம்

❖ நம்பிக்கை இல்லாத இடத்தில் நம்பிக்கை இவர் ஜெபத்தின் மூலம் எழுந்தது.

**சில நிகழ்வுகள் :**

❖ 1920-ம் ஆண்டில் காலரா கொள்ளை நோய் தாக்கியபோது நோயுற்ற பிள்ளைகளை பெற்றோரும், தொற்றுப் பற்றிக்கொண்டோரும் அவர்களது உறவினர்களும் கைவிட்டு ஓடிப்போனபோது, லெவே அடிகள் ஊரிலேயே தங்கி நோயாளிகளை பராமரித்து, உதவிகள் செய்தும் இறந்தோரை நல்லடக்கம் செய்தும் அருந்தொண்டாற்றினார்.

**ஆண்டாஊரணியில்**

❖ தந்தை லெவே விவசாயிகளின் தோழன். கால்நடைகள், ஆடு மாடுகள் நோயுற்றபோது அவர்கள் தந்தையிடம் ஓட்டிவர, அவர் ஜெபம் செய்து புனித நீரை ஊற்றிட, கால்நடைகளின் நோய் நீங்கியது.

❖ ஒருமுறை மழையில்லாமல் பயிர்கள் கருகிட, தந்தை நடுப்பகலில் சுடுகின்ற தரையில் முழந்தாளிட்டு நீண்ட நேரம் கைகளை விரித்து வானை நோக்கி ஜெபம் செய்ய மக்கள் வியக்கும் வண்ணம் பெருமழை பெய்தது.

❖ விவசாயிகளின் பயிர்களை, பூச்சிகள் நாசம் செய்யும்போது, தந்தையிடம் வர பனை ஓலையில் செபத்தை எழுதி அதை வயலின் நடுவில் ஒரு சிலுவையைக் கம்பில் கட்டி வைக்கச் சொல்லுவார். தந்தை மந்தரித்துக் கொடுத்த தீர்த்தத்தை வயலில் தெளிக்க பூச்சிகள் ஒழிந்து போனது விவசாயம் நல்ல பலனைத் தந்தது.

**இராமநாதபுரம்**

***நிலம்***

❖ தந்தை லெவே இராமநாதபுரத்தில் பணியாற்றியபோது, பணிக்காக நில உரிமையாளரைக் கேட்டபோது, அவர் கொடுக்க மறுத்துவிட்டார். தந்தை மனம் சோராது அந்த நிலத்தின் மத்தியில் நடுநிசியில் முழந்தாள்படியிட்டு, இரண்டு கைகளையும் வானத்தை நோக்கி உயர்த்தி இறைவனிடம் பல தடவை வேண்டியதை உரிமையாளர் பார்த்து தந்தைக்கு நிலத்தை விற்று விட்டார்.

**கடல் – புயல்**

❖ மக்கள் கீழக்கரை சென்று, மாதா கெபி கட்ட நுரைக்கல் சுமந்து படகில் கொண்டு வந்தனர். மழை, புயல், காற்று, கடல் கொந்தளிப்பு எற்பட மீனவர்கள் அஞ்சினர். தந்தை லெவே தன்னோடு இணைந்து அவர்களையும் ஜெபிக்க சொல்ல, சில மணித்துளிகளில் புயல் காற்று ஓய்ந்தது. கடல் கொந்தளிப்பு அடங்கியது. மீனவர்கள் பத்திரமாக கரை சேர்ந்ததற்கு தந்தைக்கு நன்றி கூறினர். மீனவர்கள் வாழ்க்கை கடலின் அலை போல அச்சத்திலும், அர்ப்பணிப்பிலும் நிறைந்தது. ஆனால் பெரும்பாலும் அவர்கள் சமுதாயத்தில் புறக்கணிக்கப்படுகின்றனர். கல்வி, சுகாதாரம், கடல் பாதுகாப்பு, வாழ்க்கைநிலை மேம்பாடு போன்றவற்றில் லெவே தந்தை அவர்களைப் பெருமுயற்சியோடு வழி நடத்தினார். மீனவர் துயரத்தை தந்தை நெருக்கமாகக் கண்டவர். அதற்காக பல முயற்சிகளை மேற்கொண்டார்.

❖ கோடையில் மழையே இருக்காது. எனவே ஆற்றுப் படுக்கையில் மக்கள் தூங்கிட, திடீரென பெரும்புயல் எழவே, தந்தை கோவில் மணியை விடாது அடித்து மக்களின் உயரைக் காத்தார். அவர்களின் தட்டு முட்டு சாமான்கள் மழையில் அடித்துச் சென்றிட ஊரே பாழடைந்தது.

தந்தை அவர்கள், ராஜா தினகர் பள்ளியில் தஞ்சம் புக வைத்து பற்பல உதவி புரிந்து உணவளித்து மக்களைக் காத்தார்.

**சருகணி**

**தாகம் தீர்த்த தந்தை லெவே**

1972 -ம் ஆண்டு சருகணியில் மழை பெய்யாததால் குடிநீர் ஊரணியும், கண்மாயும் வறண்டு போனது. ஆடு, மாடுகட்கு குடிக்கத் தண்ணீர் இல்லை. மக்கள் தந்தையிடம் சொல்ல அவர் கேட்டுக்கொண்டதின்படி, மூன்று நாட்களுக்கு ஊர் மக்களும், பள்ளி சிறுவர்களும் நண்பகல் 12 மணிக்கு கோவிலைச்சுற்றி ஊர்வலம் வர, மூன்றாம் நாள் தந்தை தள்ளாத வயதிலும் நடந்தார். மூன்றாம் நாள் பெருமழை பெய்தது.

தந்தை லெவே கால்முறிவு காரணமாக மருத்துவமனையில் இருந்தவேளையில், பிரசவ வேதனையால் துடித்த ஒரு பெண்மணியின் வேதனை நீக்க தள்ளுவண்டியில் வந்து புனித நீர் தெளித்து ஜெபம் செய்து அனுப்பும் முன் ஆண் குழந்தை பிறக்கும் என்று கூறி அனுப்பினார். சுகப்பிரசவமாகி ஆண் குழந்தை பிறக்க அக்குழந்தைக்கு லெவே என்று பெயர் சூட்டினார்.

ஊமைக் குழந்தை பேசியது. கோவில்பட்டியை சேர்ந்த ஒரு குடும்பம் தந்தை லெவேயை அணுகி தன் குழந்தையை பேச வைக்க வேண்டினார். அவர் அவர்களிடம் உங்கள் மகள் நாளை பேசுவார் என்று சொன்னபடி பேசினாள்.

**அற்புதங்களின் வேரில் :**

அவரிடம் சுத்தமான மனம், நேர்மையான சேவை மற்றும் தகர்க்க முடியாத விசுவாசம் இருந்தது. இதனால் இறைவனின் ஆற்றலை மக்களுக்கு கொண்டுவந்த புனிதராக இருந்து இறையாசீரை பெற்றுத்தந்தார்.

**7. லெவே அடிகள் நிறைந்த மனதால் எல்லோரையும் நிறைவாக கண்டார்**

லெவே அடிகளாரின் உள்ளம் எப்போதும் குறைவுகளை காணாதது, அவர் பார்த்த ஒவ்வொரு மனிதரிலும் நல்லதையே கண்டவர். ஒருவர் எவ்வளவு எளியவராக இருந்தாலும், எவ்வளவு வறுமையில் இருந்தாலும், எத்தனை குறைகளுடன் வாழ்ந்தாலும், அவர்களிடம் இருக்கும் சிறுஒளிப்புள்ளியையே அவர் பெரிதாகக் கண்டார்.

**குறைகளை அல்ல, திறமைகளை;**

**காயங்களை அல்ல, நம்பிக்கையை;**

**பலவீனங்களை அல்ல, மனிதனின் அழகை;**

கண்டவர் லெவே அடிகளார்.

அவரின் அளவில்லா கருணை, புரிதல், அன்பு எவரைக்கண்டாலும் அவர்களை முழுமையானவர்களைப்போலவே பார்க்கும் நெறியை உருவாக்கியது. எல்லோரையும் நிறைவான படைப்பாக காணும் அந்த தூய பார்வையை அவரின் புனிதத்தை உலகிற்கு உணர்த்தியது.

**பெய்யென பெய்யும் மழை : மழைச்சாமி**

பொன்னலிக்கோட்டையில் தந்தை லெவே மழை பொழிய வேண்டி கால்நடையாக ஜெபமாலை சொல்லிக்கொண்டு வந்து பீடத்தின் முன் முழங்காலிட்டு இரு கைகளையும் விரித்து ஜெபமாலை, புனிதர்களின் பிரார்த்தனை செபித்தார். மற்றவர்கள் விரித்த கைகளை கீழே போட்டுவிட்டனர். திடீரென இடி, மின்னல், பேய்மழை ஒருமணிநேரம் கொட்டியது. சந்தியாகு கோவில் விசாரணைக்காரர் மண்டியிட்டு தந்தையின் கால்களை தொட்டு புதுமை "புதுமை கோடி நன்றி" என்று கூறினார்.

இதைப்பார்த்த பிற மதத்தினர் அதிசயித்தனர்.

**தந்தையின் நிறைந்த மனம் நிறைவாக கண்ட பார்வை :**

**1. குறைகளை அல்ல , நன்மைகளை பார்த்த பார்வை**

"லெவே தந்தையின் இல்லத்தில் குறைகளை எண்ணும் பழக்கமில்லை. " ஒவ்வொருவருக்கும் ஒரு பலம், ஒரு அழகு இருப்பதாக அவர் நம்பினார். எவரையும் சந்திக்கும்போது அவர்களிடமுள்ள நல்ல பண்புகளையே பெரிதாக பார்த்தார்.

**2. உள்மனது நிறைந்ததால் வந்த நல்பார்வை**

அவரின் உள்ளம், அன்பு, பொறுமை, கருணை, சேவை ஆகியவற்றால் நிரம்பியதால் அவர் பார்த்தவர் எல்லோரும் முழுமைபெற்றவர்களாக தோன்றினர். உள்ளம் நிறைந்தால் பார்வையும் நிறைவாக இருக்கும் என்பதற்கான உயிர்த்தடமாக இருந்தார்.

**3. சமூக நிலை, வறுமை எதுவும் தடையில்லை.**

ஏழை, பணக்காரர், கற்றவர், அறியாதவர் எந்த வேறுபாடுகளும் அவரின் பார்வையில் மனிதனின் மதிப்பை குறைக்கவில்லை. ஒவ்வொருவரும் இறைவனின் படைப்பு என்பதற்கான புனித உண்மையை நடைமுறையில் வாழ்ந்தார்.

**4. மனங்களில் நம்பிக்கை விதையை விதைத்த தந்தை**

அவரைச் சந்தித்தவர்கள் தங்களை உயர்ந்தவர்களாக உணர்ந்தார்கள். ஏனெனில் லெவே தந்தை அவர்களிடம் "உன்னிடமும் ஒளி உள்ளது, நீ முழுமையற்றவன் அல்ல" என்று உணர்த்தினார்.

**5. அவரின் பார்வை - இறைக்கருணையின் பிரதிபலிப்பு**

ஒரு மனிதரை நிறைவாய் பார்ப்பது அவரின் சொந்த திறமை அல்ல. இறைவனின் கருணையால் நிறைந்த தூய உள்ளத்தின் செயல்தான். லெவே தந்தையின் பார்வையில் கிறிஸ்துவின் கண்கள் தெரிந்தன.

**நிறைந்த மனம் கொண்டார் லெவே தந்தை**
**நெருப்பிலும் நிழலிலும் கண்டார் மனிதர் மகனை**
**குறைதான் எனக் காணாத கருணைக் கண்ணை**
**பேரொளி போல உயர்த்தினார் ஒவ்வொரு மனதை.**

**8. மற்றவர்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்று உள்ளத்தால் உயர்ந்தவர்.**

லெவே தந்தையின் உள்ளத்தில் பிறரின் பாதுகாப்பு என்பது ஒரு பணி அல்ல ஒரு பொறுப்பு, ஒரு அர்ப்பணிப்பு அவர் இருந்த இடத்தில் யாராவது அபாயத்தில் இருக்கிறார்கள் என்ற செய்தி கேட்டால், அதை அவர் தனது வலியாக உணர்ந்தார்.

**சிறு சம்பவம் :**

சருகணியில் ஒரு முறை மழைநீர் பெருகி, பள்ளிக்குச் செல்லும் சிறுமிகள் பயந்து நின்றனர். நீர் ஆறு போல ஓடியதால் பெற்றோரும் குழந்தைகளை அனுப்பத் தயங்கினர். அது அறிந்த லெவே தந்தை அந்தச் சாலையில் தானே நின்றார். எதுவும் சாப்பிடாமல், மழை நனைத்தாலும் கவலைப்படாமல் அந்தக் குழந்தைகள் ஒவ்வொருவரும் பாதுகாப்பாகக் கடந்து செல்லும் வரை அவர்களுடன் நடந்தார்.

அவரை நனைந்த உடையுடன் பார்த்த ஒரு கிராம முதியவர் கேட்டார்; "தந்தையே! இதை ஏன் நீங்கள் செய்கிறீர்கள்" அவர் மெதுவாகச் சிரித்து சொன்னார்; "அவர்கள் பாதுகாப்பாக இருந்தால் அதுவே எனக்கு உண்மையான ஆசீர்வாதம்." இந்தச் சம்பவம் கிராமத்தில் யாராலும் மறக்கமுடியாத நினைவாகி, மக்கள் அனைவரின் மனதிலும் அரிவன் கருணை ஒரு சாயம் போலப் பதிந்தது.

**உள்ளத்தின் உயர்வு**

அவர் பிறரின் பாதுகாப்பு பற்றி சொன்னவரல்ல, அதற்காகனவற்றைச் செய்தவர். அது அவரது உயர்வின் மிகப்பெரிய அடையாளம்.

குழந்தைகள், ஏழை குடும்பங்கள், உதவி தேவைப்படும் முதியவர்கள் என அனைவர் மேலும் அவர் கொண்டிருந்த பொறுப்புடன் கூடிய பாதுகாவல் இறைவனின் அன்பின் பிரதிபலிப்பே. அவரின் வாழ்க்கை முழுவதும் ஒரு செய்தி மட்டும் ஒலித்தது. "நான் இருந்தால் அவர்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டும்".

லெவே அடிகள் பணியாற்றிய காலத்தில், ஒருமுறை கடும் மழை பெய்து கிராமத்தின் சிறிய குடிசைகளில் தண்ணீர் புகுந்து மக்கள் அஞ்சியிருந்தனர். மழை நிற்பதாக அனைவரும் காத்திருந்த போது, லெவே அடிகளோ ஒரே எண்ணத்தில் இருந்தார்.

"என் மக்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டுமே"!

**அந்த இரவு**

✔ முழு கிராமம் மின்னல் ஒளியில் நடுங்கி இருந்தது.

✔ சிறு குழந்தைகள் அழுகையுடன் நடுங்கி பயந்து தாய்மார்கள் மீது சாய்ந்து கொண்டிருந்தனர்.

✔ நதிக்கரையைச் சேர்ந்த இரண்டு வீடுகள் இடிந்து விழும் ஆபத்தில் இருந்தன. அந்த நேரத்தில், பயத்தால் யாரும் அங்கு செல்ல முடியாமல் நின்றபோதும் லெவே அடிகள் எந்த தயக்கமும் இல்லாமல் மழையை வென்று ஓடினார். மேலாடை நனைந்து காலில் சேறு ஒட்டியும், அவர் இரண்டு வீடுகளுக்கும் சென்று.

✔ முதலில் குழந்தைகளையும், பெண்களையும், பாதுகாப்பான பள்ளிக்கூடத்திற்கு அழைத்துச் சென்றனர்.

✔ மூதாட்டியைக் கைப்பிடித்து தாங்கிச் சென்றார்.

✔ குடும்பத்தினர் பாதுகாப்பாக இருப்பதை உறுதிப்படுத்திய பின் அடுத்த வீடுகளுக்கும் சென்று நிலைமையைப் பார்த்தார். அவர் அப்போது சொன்ன ஒரு வாக்கியம் கிராமத்தில் இன்றுவரை பேசப்படுகிறது.

"என் ஆடுகள் பயப்படக்கூடாது....அவர்கள் அமைதியாக உறங்க வேண்டும், அவர்களின் பாதுகாப்பு என் பொறுப்பு" அந்த இரவு கிராமத்தினர் அவரைப் பார்த்து உணர்ந்தது, அவர் ஒரு குரு மட்டுமல்ல, ஒரு காவல் தூதர். அவர் எந்த புகழும் எதிர்பார்க்கவில்லை. யாரும் பாராட்ட வேண்டுமென்று நினைக்கவில்லை.

**பெண்களின் பாதுகாப்புக்காக லெவே அடிகள் எடுத்த முயற்சி**

லெவே அடிகள் பணியாற்றிய பகுதிகளில் இளம் பெண்கள் இரவு நேரங்களில் சாலையில் நடந்து செல்ல வேண்டிய சூழல்கள் இருந்தன. அந்தப் பகுதிகளில் தெரு விளக்குகள் குறைவாக இருந்தன. சில இடங்களில் குடிபோதையில் நடமாடும் மனிதர்களும் இருந்தனர். பெண்களுக்கு இது பயத்தை உண்டாக்கும் சூழல்.

இந்த நிலையை மாற்ற வேண்டியதை லெவே அடிகள் ஆழமாக உணர்ந்தார்.

**1. பாதுகாப்பாக "இரவு திரும்பும் பாதை அமைத்தார்.**

அவர் கிராமத் தலைவர்களையும், தேவாலய குழுவினர்களையும் அழைத்து, இளம் பெண்கள் பள்ளி அல்லது தையல் பயிற்சி மையங்களில் இருந்து திரும்பும் நேரத்தில் தன்னார்வ பாதுகாப்பு குழு அமைத்தார்."

அதாவது 2-3 நம்பகமான இளைஞர்கள் அவர்களுடன் நடந்து செல்லும் ஏற்பாடு செய்து அதற்கும் லெவே அடிகள் தானே வழிகாட்டினார்.

**2. இளைஞர்களை பொறுப்புள்ளவர்களாய் வளர்த்தார்**

"ஒரு பெண் பயப்படாமல் நடக்க முடிகிறதா? அது உங்கள் மனித நேயத்தின் அளவு" என்று அவர் இளைஞர்களிடம் அடிக்கடி சொல்லுவார். இதனால் அந்த கிராமத்தில் இளைஞர்கள் பெண்களை மதிக்கும் மனப்பான்மை வலுவடைந்தது.

**3. வயோதிபர்களின் பாதுகாப்பு**

வயோதிபர்களின் மனம் எளிதில் உடையும் என்பதை அறிந்திருந்தார். அவர்களை அடிக்கடி சந்தித்து

"உங்க உடம்பு எப்படி இருக்கிறது?"

"உங்களுக்கு பயம் இருக்குதா?"

"நீங்கள் தனியாக இல்லை"

என்று பேசுவார், அந்த சில வார்த்தைகளும் அவர்களுக்குப் பெரிய பாதுகாப்பாய் இருந்தது.

புதிய தெருவிளக்குகளை அ ந்த பகுதியில் அமைத்தார். அது இரவில் நடக்கும் வயோதிபர்களுக்கு நிம்மதியான ஒளியாக இருந்தது. "வயதானவர் வீடு திரும்பும் வரை லெவே அடிகாரின் கண்கள் விழித்தே இருக்கும்."

**9. பொறுமையும் கனிவும் - லெவே தந்தையின் வாழ்வில் வெளிப்பட்ட அற்புதக் கனிகள்**

மனிதரை மனிதராகப் பார்க்கின்ற, மதிக்கின்ற மகத்துவத்தில் தான் இறைவனைக் கண்டு கொள்ளமுடியும்.

★மற்றவர்களின் குறைகளை பொறுத்துக் கொள்ளும் கருணை.

★ கஷ்டத்தில் கூட மனம் தளராமல் நிற்கச்செய்யும் நம்பிக்கை. இவை அனைத்தும் மனித முயற்சியால் மட்டும் அல்ல. இறைவன் தரும் உள்ளார்ந்த அமைதி என்பதால் தான் வருகிறது.

**நிகழ்வு "கோபத்தைக் கரைத்த கனிவு"**

ஒரு நாள் தேவாலய வளாகத்தில் ஒரு குடும்பம் தகராறாகத்தான் வந்தது. கணவன் மது போதையில், மனைவி கோபத்தில் கண்ணீர் மல்க; சின்ன சின்ன பிள்ளைகள் பயத்துடன் நின்றனர்.

லெவே தந்தையைப் பார்த்தும் அந்த மனைவி ஒருசேர அழுதும், சத்தமாகவும் பேசினார்.

"அப்பா.. இவங்க வாழ்க்கையையே நாசப்படுத்துறாங்க. இந்த வீட்டிலே அமைதியே இல்ல!"

கணவன் கோபத்துடன் எதிர்ப்பதற்குச் சென்றான் அதைப் பார்த்த அனைவரும் இது பெரிய பிரச்சனையாக மாறும் என பயந்தனர்.

ஆனால் லெவே தந்தை மட்டும் ஒரு விநாடியும் பயப்படவில்லை. அவர் எந்த சத்தமும் இழக்காமல், குரலையும் உயர்த்தாமல் அந்த கணவன் கையை மெதுவாகப் பிடித்து நிதானமாகச் சொன்னார்.

"உங்க மனசு தாங்கமுடியாத காயத்தில் இருக்கு ஆனா அதை குடும்பத்தில் இறைக்காதீங்க. உங்கள் குழந்தைகள் பயந்து நிற்குது"

இந்த வார்த்தைகளில் ஆத்திரத்தை அடக்கும் அமைதி இருந்தது. அந்த மனிதன் சில நொடிகள் பேசாமல் நின்றான். மனைவியின் அழுகையும் மெதுவாக அமைதியானது. அவர்களைத் தனியாக உட்கார வைத்து லெவே தந்தை முழு ஒரு மணி நேரம் பேசினார். தண்டனை கொடுக்கவில்லை. நீதிபதி போல் தீர்ப்பு சொல்லவில்லை. ஆனால் மனிதரை மனிதராகப் பார்க்கும் கருணை மட்டும் கொடுத்தார்.

இறுதியில் அந்த குடும்பம் அழுதே சமாதானமானது. அந்த நாள் தான் அவர்கள் சொன்னது.

"தந்தையின் பொறுமைதான் நம்ம வீட்டை உடைஞ்சு போகாம காப்பாத்துச்சு"

அந்த மனிதர் பின்னர் முற்றிலும் மாற்றப்பட்டு குடும்பத்துடன் வாழத் தொடங்கினார்.

**லெவே தந்தையின் பொறுமை - மருந்துக் கட்டணம் கொடுக்காமல் திட்டிய மூத்தவர் (முதியோர்) சம்பவம்**

சருகணி பகுதியில் மிகவும் ஏழ்மையில் வாழ்ந்த முதியோர் இருந்தார். அவருக்கு வயிற்று நோய் அதிகரித்து மருந்து வாங்க பணமே இல்லாத நிலை. ஒரு நாள் மிகுந்த வேதனையுடன் தந்தை லெவேயின் இல்லம் வந்தார். அவர் கோபமும், துயரமும் கலந்த நிலையில் அவர் தந்தையைப் பார்க்கும் முன் வாசலிலேயே சத்தமாகக் கூறினார். உங்கள் வேதம் ஏழைகளுக்காகன்னு சொல்றாங்க, ஆனா எனக்கு மருந்து வாங்க கூட உதவல. அவரின் குரல் நடுங்கியது. கண்களில் வலி உடலில் பலவீனம். ஆனால் அங்கு இருந்த சிலர் நொந்து போய் "இப்படி தந்தையை திட்டக்கூடாதே! என்று அவரைத் தடுக்க முயன்றனர். பக்கத்து அறையில் இருந்த லெவே மெதுவாக வெளியில் வந்து எந்த பதட்டமும் இல்லாமல் சிரித்த முகத்துடன் அருகே சென்றார். அவரைத் தன் அறைக்குள் அழைத்து தண்ணீர் கொடுத்து என்ன பிரச்சனை என்று கேட்டார். அவர் அழுதபடி நான் எனது வலியால் கத்திக்கிட்டே வந்தேன் உங்களை திட்டணும்னு இல்ல" என்றார்.

மனிதரை மதிக்கும் மனமே; உண்மையான இறை அறிவு. ஒருவன் யார் என்பதை பார்த்து அல்ல. இவன் தேவனின் படைப்பே என்பதால் தந்தை லெவே அனைவரையும் மதித்தார். இதுதான் ஆன்மீகத்தின் உச்சம்.

**"பொறுமை மனிதனின் மனதை தெய்வீகமாக்கும்.**
**கனிவு அவரது உள்ளத்தை ஒளியாக்கும்"**

மற்றவரை மதிக்கும் பண்பு அவரது வாழ்க்கையை இறைவனின் சாயலாக்கியது. தந்தை லெவே வாழ்வில் கிறிஸ்துவின் இதயத்துடிப்புடன் கிறிஸ்துவின் கண்களால் உலகைப் பார்த்தார். அவரின் வாழ்க்கையே ஒரு சாட்சி.

**10. தந்தை லெவே விவிலியத்தினை தனதாக்கி வாழ்ந்தவர். இதற்கு விவிலியச் சான்றுகள் அவரின் சாட்சி, மாட்சி**

**1. புனிதம்:** "நீங்கள் தூயவராயிருங்கள்; ஏனெனில் நான் தூயவன்" என மறைநூலில் எழுதப்பட்டுள்ளது. (பேதுரு 1:16)

"நீங்கள் தூயோராவதே கடவுளின் திருவுளம்" (தெசலோனிக்கர் 4:3)

**2. அன்பு**

"அன்பு பொறுமையுள்ளது" (1 கொரி 13:4)

"கிறிஸ்து உங்களுக்காகத் தம்மை நறுமணம் வீசும் பலியும் காணிக்கையுமாகக் கடவுளிடம் ஒப்படைத்து உங்களிடம் அன்பு கூர்ந்தது போல, நீங்களும் அன்பு கொண்டு வாழுங்கள் ". (எபேசியர் 5:2)

**3. பொறுமை**

"தூய ஆவியின் கனியோ, அன்பு, மகிழ்ச்சி, அமைதி, பொறுமை, பரிவு, நன்னயம், நம்பிக்கை" (கலாத் 5:22)

**4. மன்னிப்பு**

"கடவுள் உங்களைக் கிறிஸ்து வழியாக மன்னித்தது போல நீங்களும் ஒருவரை ஒருவர் மன்னியுங்கள்" (எபேசி 4:32)

**5. நீதி**

"நீதி வெள்ளமெனப் பொங்கி வருக! நேர்மை வற்றாத ஆறாகப் பாய்ந்து வருக!" (ஆமோஸ் 5:24)

**6. சேவை மனம்**

"மானிட மகன் தொண்டு ஏற்பதற்கு அல்ல, மாறாக தொண்டு ஆற்றுவதற்கும் பலருடைய மீட்புக்கு ஈடாகத் தம் உயிரைக் கொடுப்பதற்கும் வந்தார்" (மாற்கு 10:45)

**7. விசுவாசம்**

"நான் நல்லதொரு போராட்டத்தில் ஈடுபட்டேன. என் ஓட்டத்தை முடித்து விட்டேன். விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன். (2 திமோத்தேயு 4:7)

**8. ஒளியின் சாட்சி**

"உங்கள் ஒளி மனிதர் முன் ஒளிர்க! அப்பொழுது அவர்கள் உங்கள் நற்செயல்களைக் கண்டு விண்ணகத் தந்தையைப் போற்றி புகழ்வார்கள்" (மத்தேயு 5:16)

**9. ஆசி மொழி**

"இரக்கமும், அமைதியும், அன்பும் உங்களில் பெருக" (யூதா 1:2)

லெவே தந்தை அவர்கள் மேற் கூறப்பட்ட விவிலிய இறை வார்த்தைகளையே தன் பற்றுக் கோடாகக் கொண்டு வாழ்ந்து வந்தார். கிறிஸ்துவின் சாட்சியாய்த் திகழ்ந்தார்

**முடிவுரை**

லெவே அடிகளின் வாழ்க்கை என்பது ஒரு மனிதனின் பயணம் அல்ல. ஒரு ஒளியின் பிறப்பு. பேச்சை விட செயலின் மேன்மையை உலகிற்கு எடுத்துக் காட்டியவர்.

ஏழைகள் தம் மக்கள் என்று எண்ணி அவர்களின் நெஞ்சில் இறைவனைக் கண்டவர்.

**யாரும் பார்க்காத இடத்தில் உதவி புரிந்து**
**யாரும் கேட்காத போதும் பிராத்தித்து**
**யாரும் துணை நின்றிடா நேரங்களில்**
**ஆதரவாக நின்ற புனித ஆன்மா**
**பொறுமை, கனிவு, கருணை, அன்பு இவை**
**அனைத்தையும் கலந்த ஒளி மிகு செயல்களால்**
**மண்ணில் மாய்ந்தாலும்.**
**மக்களின் மனங்களில் மறையாத மகான் அவர்**
**அன்பை விதைத்து மனிதனை உயர்த்திய**
**"லெவே அடிகள்"**
**தம் வாழ்வால் கற்றுக் கொடுத்தார்.**
**இறைவனைக் காணவேண்டுமெனில்**
**மனிதனை நேசிக்க வேண்டும் என்ற**
**அவரின் செம்மையான சேவையின் "ஒளி"**
**இன்றும் எண்ணற்ற உள்ளங்களில்**
**வழிகாட்டும் தீபமாக தொடர்ந்து எரிகிறது.**
**தந்தை லெவே அவர்களின் "தாரகை மந்திரம்"**
**"இயேசுவே அன்பின் அரசே!**
**உமது அன்புள்ள இரக்கத்தை நம்புகிறேன்"**

இதையே அவர் தானும் செபிப்பதோடு மற்றவர்களையும் இச்செபத்தை சொல்லி இறை எழுப்புதல் செய்வார்.

லெவே அடிகள் ஒரு கிறிஸ்தவ துறவியாக மட்டுமல்ல. ஒரு மனிதநேயப் புனிதராக வாழ்ந்தவர். அவர் செய்த கல்வி சேவை, மீனவர் நலப்பணி, சமத்துவப் போராட்டம் ஆகியவை இன்றும் சமூகத்தில் நம்பிக்கை விதையாக உள்ளது.

தந்தை லெவே அவரின் வாழ்விலிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டியது அன்புடன் பணிபுரிவது.

நல்லெண்ணத்துடன் வாழ்வது
ஒடுக்கப்பட்டோருக்குக் குரல் கொடுப்பது.
லெவே தந்தையின் ஆசிர்
இரக்கத் தென்றல் உங்கள்
வாழ்க்கையைத் தொடட்டும்
சமாதானம் உங்கள் இதயத்தை நிரப்பட்டும்.
அன்பின் ஒளி உங்கள் பாதையில்
எப்போதும் பொழியப்படட்டும்.

இறை இயேசுவின் அருள் உங்கள் மேல் நாளும் பொழியப்படட்டும்.

# மன்னிப்பு ஒரு தொடக்கம்; குணமாதல் ஒரு பயணம்

✍ அருள்பணி. ஜா. பாஸ்டின் பாரதி
உதவிப் பங்குத்தந்தை, ஆண்டாவூரணி

தவக்காலத்தில் நாம் அனைவரும் நோன்பு இருப்பதற்கும், இறைச்சியை தவிர்ப்பதற்கும் பல தவம் சார்ந்த காரியங்களைச் செய்வதற்கும் ஆர்வம் காட்டுகிறோம். இவையனைத்தும் நல்ல முயற்சிகளே. ஆனால், நாம் ஒரு முக்கியமான வரிசை முறையை பின்பற்றுவது இன்னும் சிறப்பானதாகும்.

நாம் தவம் செய்யத்தொடங்குமுன் முதலில் பாவமன்னிப்பைப் பெறவேண்டும்.

அதாவது இத்தவக்காலத்தை நாம் நம் முயற்சியால் அல்ல, இறைவனின் இரக்கத்தோடு தொடங்க வேண்டும்.

**ஒப்புரவு அருட்சாதனத்தில்**

1. நம் பாவங்கள் உண்மையாகவே மன்னிக்கப்படுகின்றன.
2. இறைவனின் இரக்கத்தை நாம் அனுபவிக்கிறோம்.
3. நம் மனப்பாரம் இரக்கி வைக்கப்படுகிறது,
4. இறைவனோடு நமக்கு இருந்த விரிசல் மறைந்து, உறவு மீண்டும் மலர்கிறது,
5. நாம் மீண்டும் அவருடைய பிள்ளைகளாக அன்புடன் வரவேற்கப்படுகிறோம்.

புனித பவுல் கூறுவதை போல "ஒருவர் கிறிஸ்துவோடு இணைந்து வாழும்போது அவர் புதிய படைப்பாகிறார்." (2 கொரிந்தியர் 5:17)

இருந்தாலும் நம் மனதிற்குள் சில கேள்விகள் எழலாம்.

✦ "எனக்கு மன்னிப்பு கிடைத்துவிட்டதே, பின் ஏன் இன்னும் நான் பழைய பலவீனங்களோடு போராடுகிறேன்?"

✦ "ஏன் என் கெட்ட பழக்கங்கள் இன்னும் முழுமையாக மாறவில்லை?"

"மனதின் காயங்கள் ஏன் இன்னும் வலிக்கின்றன?"

இதற்கான பதில் மிகவும் எளிமையானது:

ஒப்புரவு அருள்சாதனம் பாவத்தின் குற்றத்தை நீக்குகிறது: ஆனால் அந்த வடுக்கள் ஆறி, நாம் முழுமையாகக் குணமடையக் கால அவகாசம் தேவைப்படுகிறது.

**ஓர் உதாரணம் :**

ஒரு சிறுவன் வீட்டில் விளையாடிக்கொண்டிருக்கும்போது, எதிர்பாராமல் ஒரு கண்ணாடி தம்ளரை உடைத்துவிடுகிறான். பயத்தில் அழுதுகொண்டே அம்மாவிடம் மன்னிப்பு கேட்கிறான். அவனது அம்மாவும் ஓடிவந்து, "பரவாயில்லை மகனே, அழாதே. நான் உன்னை மன்னித்து விட்டேன். " என்று அவனை அரவணைக்கிறார். இப்போது சிறுவனின் பயம் நீங்கிவிட்டது. உறவு சீராகி விட்டது. ஆனால், தரையில் சிதறிக்கிடக்கும் கண்ணாடித்துண்டுகள் இன்னும் அப்படியே இருக்கின்றன. யாராவது அந்தத்துண்டுகளை அப்புறப்படுத்தி அந்த இடத்தை சுத்தம் செய்ய வேண்டும். அப்போதுதான் மீண்டும் யாருக்கும் காயம் ஏற்படாது. அம்மாவின் மன்னிப்பு உடனடியாக கிடைத்தது. ஆனால் , அந்த சேதத்தை சரிசெய்ய இன்னும் சில வேலைகள் மிச்சம் இருக்கின்றன. நமது ஆன்மீக வாழ்வும் இப்படித்தான்.

**சக்கேயுவின் வாழ்வு காட்டும் வழி :**

ஒப்புரவு அருட்சாதனத்தின் வழியாக கடவுளின் மன்னிப்பை நாம் உடனே பெறுகிறோம். ஆனால் நம் பாவங்களால் ஏற்பட்ட காயங்களை ஆற்ற, சக்கேயுவை போல நாமும் சில பரிகார முயற்சிகளை செய்ய வேண்டியுள்ளது.

இயேசுவின் அன்பால் கவரப்பட்ட சக்கேயு, ஒரு பெரிய தீர்மானத்தை எடுக்கிறார்: "ஆண்டவரே, என் உடமைகளில் பாதியை ஏழைகளுக்கு கொடுத்துவிடுகிறேன்; எவரிடமாவது

எதையாவது ஏமாற்றி பறித்திருந்தால் அதை நான்கு மடங்காக திருப்பிக் கொடுத்துவிடுகிறேன்." (லூக்கா 19:8)

இங்கே இயேசு சக்கேயுவின் வீட்டிற்கு சென்றபோதே அவருக்கு மன்னிப்புக் கிடைத்துவிட்டது. ஆனால் சக்கேயு, தான்செய்த பாவத்தால் ஏற்பட்ட பாதிப்புகளை சரிசெய்ய விரும்பினார். அவர்செய்த அந்த 'பரிகாரம்' தான் அவரை முழுமையாக குணப்படுத்தியது. இதை கண்டபின்னரே இயேசு "இன்று இந்த வீட்டிற்கு மீட்பு உண்டாயிற்று" (லூக்கா 19:9) என்று அறிவிக்கிறார்.

தவக்காலம் என்பது இந்த "குணமடையும்" காலமாகும்.

பாவம் நம் வாழ்வின் ஒழுங்கை எதையெல்லாம் கலைத்துப்போட்டதோ, அதையெல்லாம் இறைவனின் அருள் மெதுவாக சீரமைக்கும் காலமிது.

கத்தோலிக்க திருஅவையின் மறைக்கல்வி ஏடு **(CCC 1459)** தெளிவாகச் சொல்கிறது :

"ஒப்புரவு அருட்சாதனம் பாவத்தை நீக்குகிறது. ஆனால் பாவம் ஏற்படுத்திய பாதிப்புகளை அது உடனடியாக முழுமையாகக் குணப்படுத்துவதில்லை."

ஏன் ஒப்புரவு அருட்சாதனத்தை முதலில் பெற வேண்டும்?

ஒப்புரவு அருட்சாதனம் பெறாமல் நாம் எடுக்கும் தவமுயற்சிகள் வெறும் "சுய முன்னேற்றப் பயிற்சி" போல அமைந்துவிடும்.

ஆனால், மன்னிப்பைப் பெற்றவிட்டு நாம் செய்யும் தவம்

* இறைவனின் அன்புக்கு நாம் காட்டும் நன்றியாக மாறும்.

* நாம் செய்த தவறைச் சரிசெய்யும் ஆர்வமாக மாறும்.

* முழுமையாகக் குணமடைய நாம் மேற்கொள்ளும் பயணமாக மாறும்.



நாம் மன்னிப்பு "கிடைப்பதற்காக" நோன்பு இருப்பதில்லை; என்பதால் நன்றியுடன் நோன்பு இருக்கிறோம்..

**இது ஒரு அன்பான அழைப்பு**

நாம் "தகுதியானவர்" ஆன பிறகுதான் இந்த அருட்சாதனத்தைப் பெற வேண்டும் என்பதில்லை; நாம் 'அரைகுறையாக ' இருப்பதை உணரும்போதே இறைவனிடம் செல்ல வேண்டும். இறைவன் நம்மைத் தண்டிக்கக் காத்திருக்கவில்லை; அவர் நம்மை மன்னித்துக் குணப்படுத்தக் காத்துக்கொண்டிருக்கிறார்.

இந்தத் தவக்காலத்தை முறையான ஒப்புரவு அருட்சாதனத்தோடு தொடங்குவோம். அங்கேதான் இறைவனின் இரக்கம் கிடைக்கிறது. அங்கிருந்துதான் நம் வாழ்வின் காயங்கள் ஆறத் தொடங்குகின்றன.

மன்னிப்பு என்பது ஒரு நொடியில் கிடைப்பது; குணமாதல் என்பது நாம் செய்யும் தவ முயற்சிகளான ஒருத்தல், நோன்பு, இரக்க செயல்கள் வழியாக தொடரும் ஒரு பயணம்.

# சுவாசத்தில் நோயின் வாசம்

✍ அருள்பணி. **ஜெ. மரிய அந்தோணி**
வியான்னி அருள்பணி மையம், சிவகங்கை

**ஆய்வு :**

அமெரிக்காவின் கொலம்பியா பல்கலைக்கழகத்தால் செய்யப்பட்ட ஆய்வு இது! ஒரு மனிதரின் வெளிசுவாசத்தை (வெளிமூச்சை) ஆய்வு செய்வதன் வழியாக அவருக்குள் என்ன விதமான நோய் இருக்கிறது என்பதைக் கண்டறிய முடியும் என்கின்றது இந்த ஆய்வு.

ஒரு மனிதர் சுவாசத்தை வெளியே விடுகின்ற பொழுது அவர் கரியமிலவாயுவை (**$CO_2$**) மட்டும் வெளியேற்றுவதில்லை. உடம்பிலுள்ள சில வேதிப்பொருள்களும் வெளியேறுகின்றனவாம். இந்த வேதிப்பொருள்களை ஆய்வு செய்வதன் மூலம் ஒரு மனிதரின் உடம்பில் இருக்கும் நோயைக் கண்டுகொள்ள முடியும். கணையம் தொடர்புடைய நோயுள்ளவர்களின் வெளிசுவாசத்தில் டிமெத்தில் சல்ஃபைடு (**Demethil Sulfide**) என்றொரு வேதிப்பொருள் இருக்கிறதாம். ஒருவரின் வெளிசுவாசத்தில் அமினஸ் (**Amines**) என்ற வேதிப்பொருள் இருந்தால் அவருக்கு நுரையீரல் புற்றுவியாதி இருக்கிறதாம். சர்க்கரை நோயாளிகளின் வெளிசுவாசத்தில் அதிகமாக அசிட்டோன் (**Acetone**) என்றொரு வேதிப்பொருள் இருக்கின்றது. ஒருவர் வெளியிடும் சுவாசத்தில் பேர்ட்டேன் (Pertane) என்றொரு வேதிப்பொருள் இருந்தால் அவருக்கு இதயம் தொடர்புடைய நோய் இருக்கின்றதாம்.

**சுய ஆய்வு :**

சுவாசம் நாம் உயிர்வாழ்வதோடு தொடர்புடையது என்பது நாம் அறிந்ததே! அதே சுவாசம் நாம் நலமோடு வாழ்கிறோமோ என்பதைச் சுட்டிக்காட்டும் கருவியாகவும் இருக்கிறது என்பதை மேற்கண்ட ஆய்வு எடுத்துரைக்கிறது. நாம் கொஞ்சம் கவனமின்றி இருந்தால் நம் சுவாசத்தின் வழியே நோயைப் பிறருக்கு பரப்பக்கூடியவர்களாகவும், அதேவேளையில் பிறரிடமிருந்து நோயை உள்வாங்கக்கூடியவர்களாகவும் இருக்கக்கூடும் என்பதை உணர்வது அவசியம். கொரோனா போன்ற தொற்றுவியாதிகள் பரவும் நேரங்களில் இவ்வுண்மை அப்பட்டமாகத் தெரிந்தாலும் இது ஏறத்தாழ எல்லா வியாதிகளுக்கும் ஓரளவு பொருந்தக்கூடியதாக இருக்கிறது. அதற்காக நாம் எல்லா நேரங்களும் முகக்கவசம் அணிந்திருக்க வேண்டும் என்கிற அவசியமில்லை. மாறாக, நமது உடலின் நோய்எதிர்ப்புத் திறனை உயர்வாக வைத்துக்கொண்டு நம்மை நலமாக வைத்துக்கொண்டாலே போதுமானது. தன்னை நலமாக வைத்துக்கொள்ளத் தெரிந்த மனிதர் நோயைப் பரப்புவதுமில்லை, நோயால் பாதிக்கடுவதுமில்லை.

இக்கருத்தை நம் ஒட்டுமொத்த வாழ்விற்கும் பொருத்திப் பார்க்கலாம். ஒரு மனிதர் நல்லவராகவோ கெட்டவராகவோ இருந்தால் அது அவரோடு முடிந்து விடுவதில்லை. அவரது தன்மை ஒவ்வொரு வினாடியும் அவரிலிருந்து வெளிப்பட்டுக் கொண்டே இருக்கிறது. இதையே நாம் தாக்கம் என்று (influence) என்று சொல்லுகிறோம். நேர்மறையான மனிதர்கள் தாங்கள் செல்லும் இடம் எங்கும் நேர்மறையான தாக்கங்களை ஏற்படுத்திச் செல்கின்றனர். எதிர்மறையான மனிதர்கள் எதிர்மறையான தாக்கங்களை விட்டுச் செல்கின்றனர்.

எனினும் பிறரது செயல்பாடுகளும் தன்மைகளும் நம்மில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்துகின்றன என்பது நம் யாராக இருக்கிறோம் என்பதைப் பொறுத்தது. நாம் நமது நேர்மறைத்தன்மையில் ஊன்றி இருந்தோம் என்றால், பிறரது எதிர்மறைத்தன்மை நம்மைப் பாதிக்கப் போவதில்லை. அதாவது நல்ல உடல் நலனோடு இருக்கிற மனிதரை சுற்றியுள்ள கிருமிகள் பாதிப்பதில்லை என்பதுபோல! அதேவேளையில் எதிர்மறை தன்மையில் மூழ்கிக் கிடக்கின்ற மனிதர்கள் பிறரிடம் இருந்த வரும் நேர்மறைத் தாக்கத்தை தங்களுக்குள் அனுமதிப்பதில்லை என்பதும் உண்மை.

தபசு காலம் என்பது நாம் எத்தகைய தாக்கத்தை பிறரில் ஏற்படுத்தக்கூடியவர்களாக இருக்கிறோம் என்பதைச் சிந்தித்துப் பார்ப்பதற்கும், எத்தகைய தாக்கத்திற்கும் நம்மை ஆளாக்கி கொள்கிறோம் என்பதை அலசிப்பார்ப்பதற்கும் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் காலம்! இந்த மாதத்தின் தலைப்பான "உள்ளே வாருங்கள்" என்ற தலைப்பும், "மனம் மாறுங்கள் " என்ற இயேசுவின் அழைப்பும் இணைந்து செல்கின்றன. நமக்கு உள்ளே வருகின்ற பொழுது நமக்கு உள்ளே என்ன நிகழ்கிறது என்கிற தெளிவு நம்மிடம் இருக்கும். இத்தகைய தெளிவு நாம் எத்தகைய நிலையில் நமது வாழ்வை அமைத்துக் கொள்கிறோம் என்ற விழிப்புணர்வையும், எத்தகைய நிலையை நோக்கிப் பயணிக்க வேண்டும் என்கிற அழைப்பையும் நமக்குத் தரும். நம் வாழ்வு தானாகவே மன மாற்றத்தை நோக்கி பயணிக்க ஆரம்பிக்கும்.

**இதோ சுவாசத்தைப் பற்றி இன்னொரு ஆய்வு!**

**75. சுவாசம் என்றொரு பாலம்**

**ஆய்வு :**

மனிதர்களின் மூச்சுக்காற்றை பற்றிய ஆய்வு இது நாம் சுவாசிக்கும் போது பிராணவாயுவை (Oxygen) உள்வாங்கி, கரியமிலவாயுவை (Carbon Dioxide) வெளியே விடுகிறோம் என்பது நாம் அறிந்த ஒன்றுதான். எனினும் நம் சுவாசப் பரிமாற்றத்தில் வேறு சில காரியங்களும் நடைபெறுகின்றனவாம்.

நாம் மூச்சுக்காற்றை வெளியே விடும் ஒவ்வொரு முறையும் நம் உடலில் ஏறத்தாழ 28 அணுக்கள் வெளியேறுகின்றனவாம். அதேபோல் மூச்சை உள்ளே இழுக்கின்றபோது, வெறும் பிராணவாயுவை மட்டும் அல்ல, ஏனைய நுண்ணுயிர்களையும் நாம் சுவாசிக்கின்றோம்.

**சுய ஆய்வு :**

சுவாசத்தைப் பற்றிய இவ்வாய்வு இரண்டு முக்கியமான கருத்துக்களை நம்முன் வைக்கின்றது. (அ) நமது உடல் தொடர்மாற்றத்திற்கு ஆட்பட்டுக் கொண்டேயிருக்கிறது. ஒவ்வொரு சுவாசத்தின் போதும் "நாம்" என்று நினைப்பதன் ஒரு மிகச் சிறியபகுதி நம்மை விட்டு வெளியேறி, "நமக்கு வெளியே" இருக்கின்ற சிலகாரியங்கள் நமக்குள் வந்து "நம்முடையதாக" மாறுகின்றன. எனவே "நாம்" என்னுடையது என்று எண்ணுகின்ற ஒன்று தொடர் மீள்உருவாக்கத்தில் இருந்து கொண்டே இருக்கிறது. நிலையான "நான்" என்ற ஒன்று எதுவும் கிடையாது.

(ஆ) கூட்டமாக மனிதர்கள் கூடும் போதுகூட மேற்கண்ட சுவாசநிலையின் காரணமாக கூட்டத்தின் தன்மையும் மாறுகிறது. ஒருவரால் வெளிவிடப்படும் சில அணுக்கள் அடுத்தவரால் சுவாசிக்கப்படும் போது நாம் என்று நினைத்த நமது ஒருபகுதி அடுத்தவருடையதாக மாறுகிறது என்று அர்த்தம். அதேபோல அடுத்தவரது ஒரு பகுதி நம்முடையதாக மாறுகிறது. இவ்வாறு ஒவ்வொரு வினாடியும் நம்மை அறியாமலேயே பிறர்மீது நாம் அறிவுசார்ந்த தாக்கத்தை மட்டுமல்ல, உடல்சார்ந்த தாக்கத்தையும் பாதிப்பையும் விட்டுச் செல்லுகிறோம். வேறுவகையில் சொல்லப்போனால் குடும்பத்தில் உள்ள ஒருநபர் தன் உடல்நலனையும் மனநலனையும் நன்றாக வைத்திருப்பதன் மூலம் தன் குடும்பத்தின் ஏனைய உறுப்பினர்கள் உடல் அளவிலும் மனஅளவிலும் நலமாக இருப்பதற்கான வாய்ப்பை மறைமுகமாக ஏற்படுத்த முடியும். அதே வேளையில் குடும்பத்தில் ஒரு நபர் உடல் அளவிலும் மன அளவிலும் எதிர்மறைத்தன்மையில் மூழ்கிக் கிடந்தால் அது குடும்பத்தின் மற்ற உறுப்பினர்களையும் எதிர்மறையாக பாதிக்கிறது என்ற உண்மையை நாம் மறந்து விடக்கூடாது.

இவ்வாறு சுவாசம் நமக்கும் பிறருக்கும் இடையேயான பாலமாக இருக்கிறது என்று சொன்னால் அது மிகையல்ல. இந்த சுவாசம் என்னும் பாலம் நல்லவற்றை கடத்துகிறதா அல்லது கெட்டவற்றை கடத்துகிறதா என்பது நாம் எவ்வாறு இருக்கிறோம் என்பதைப் பொறுத்தது.

## கிறிஸ்தவ வாழ்வுப் பணிக்குழு - சிவகங்கை மறைமாவட்டம்
## தொடர் விவிலியப் போட்டி - ஜனவரி 2026

### முதல் சுற்று : யோபு நூல்

**I. ஒரே வார்த்தையில் விடையளி** **5x1=5**

1. உதட்டளவில் அவரைப் புகழ்ந்தவர்கள் நாவினால் என்ன சொன்னார்கள்?
2. இவற்றுடன் உமது இல்லத்தினுள் செல்வேன் என் பொருத்தனைகள் உமக்கு செலுத்துவேன்.
3. எதன் பொன் அணிந்து வடிவாக வலப்புறம் நிற்கின்றார் பட்டத்து அரசி?
4. எவை நீரோடைக்காக தவிப்பது போல் என் நெஞ்சம் தவிக்கிறது?
5. இவற்றில் நிறைவடைவது போல் என் உயிர் நிறைவடையும்.

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக** **5x1=5**

1. பலருக்கு நான் ஒரு ..................... காணப்படுகின்றேன். நீரே எனக்கு உறுதியான அடைக்கலம்.
2. ஆண்டவர் மேல் உன் ..................... போட்டு விடு வேர் உனக்கு ஆதரவளிப்பார்.
3. ..................... மக்களுக்கு சமாதானத்தை கொடுக்கட்டும். குன்றுகள் நீதியை விளைவிக்கட்டும்.
4. .....................டம் உங்கள் வலிமையை காட்ட வேண்டாம்
5. ..................... க்கு செவி சாய்ப்பதில் நான் கருத்தாய் உள்ளேன் யாழிசைத்து அதன் புதிரை விடுவிப்பேன்.

**III. சரியா? தவறா? கண்டுபிடி.** **5x1=5**

1. அவர் கெருக்குற்றோரின் ஆணவத்தை அழிக்கின்றார்; தாழ்வாகக் கருதப்பட்டோரை மீட்கின்றார்.
2. ஆட்சியும் மாட்சியும் கடவுளுக்கே உரியன; அமைதியை உன்னதங்களில் அவரே நிலைநாட்டுவார்.
3. உண்மையாகவே, கொடுமையை இறைவன் செய்யமாட்டார். நீதியை எல்லாம் வல்லவர் புரட்டமாட்டார்.
4. உம்மை பற்றிக் காதால் மட்டுமே கேள்விப்பட்டேன்; ஆனால், இப்பொழுது, என் கண்களே உம்மைக் காண்கின்றனர்.
5. யோபின் முன்னைய நாள்களில் இருந்ததைவிட, பின்னைய நாள்களில் ஆண்டவர் ஆசி வழங்கினார்.

**IV. பொது அறிவு** **5x1=5**

1. திருச்சபை திருநீற்றுப் புதன் நிகழ்வை ஏன் ஏற்படுத்தியது?
2. தவக்காலம் 40 நாட்கள் எதன் அடிப்படையில் உருவாக்கியது?
3. இயேசுவின் திரு இருதய திருவிழா எப்போது கொண்டாடப்படுகிறது?
4. திருவழிபாட்டில் சிகரமாக விளங்கும் முப்பெரும் விழாக்கள் எவை?
5. புனித ஆகத்தா யாருக்கு பாதுகாவலி?

**V. தேடிக் கண்டுபிடி** **5x1=5**

1. என் பிள்ளைகள் ஒரு வேளை பாவம் செய்து, தங்கள் உள்ளத்தில் கடவுளைத் தூற்றியிருக்கக் கூடும் என்று யோபு நினைத்து, காலையில் எழுந்து அவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப எல்லாருக்காகவும் எரிபலியை ஒப்புக்கொடுப்பார்.
2. இறைவன் உள்ளத்தில் ஞானமுள்ளவர்; ஆற்றலில் வல்லவர்; அவர்க்கு எதிராய்த் தம்மைக் கடினப்படுத்தி, வளமுடன் வாழ்ந்தவர் யார்?
3. ஞானமும் வலிமையும் அவரிடமே உள்ளன! ஆலோசனையும் அறிவும் அவர்க்கே உரியன
4. நேர்மையுள்ளோர் அதைக் கண்டு மனம் மகிழ்கின்றனர்; மாற்றோர் அவர்களை எள்ளி நகையாடுகின்றனர்.
5. இறைவனின் ஆவி என்னைப் படைத்தது; எல்லாம் வல்லவரின் மூச்சு என்னை வாழ்விக்கின்றது.

## VI. குறுக்கெழுத்துப் போட்டி 10x1=10

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | | | | | |
| | | | 2,3 | | 4 |
| 5 | | | | | |
| | | 6 | | | |
| | | 7 | | | |
| 8 | | | | 9 | 10 |

**I. இடமிருந்து வலம்**

1. அவர் உள்ளம் .............. நீர் அவருக்கு தந்தருளினீர்.
5. ஆண்களும் பெண்களுமாக நாங்கள் ............. விற்கப்பட்டிருந்தாள் கூட நான் மௌனமாய் இருந்திருப்பேன்.
8. நான் என் ............. பாவம் செய்யாதவண்ணம் என் நடைமுறைகளைக் காத்துக்கொள்வேன்

**II. வலமிருந்து இடம்**

2. என் வாழ்வின் ஒவ்வொரு கட்டமும் உம் ............. உள்ளது.
6. என் ............. ஆண்டவரிடம் ஒப்படைத்துவிடும்
7. நான் என் ............. வயிற்றில் இருந்தது முதல் என் இறைவன் நீரே.

**III. மேலிருந்து கீழ்**

3. மன்னர் விடுமுறை நாளை அறிவித்துத் தம் .................. அன்பளிப்புகள் வழங்கினார்
4. .................. பேசுவோரை நீ அழித்திடுவீர்.

**IV. கீழிருந்து மேல்**

9. என் .................. ஆண்டவரே, உம்மிடம் உதவி வேண்டினேன்.
10. என் உள்ளம் உம்மைப் புகழ்ந்து பாடும் .................. இராது.

## குறிப்பு

1. தொடர் விவிலியப் போட்டி ஆனந்த கங்கைத் தூது இதழில் வெளிவரும்.
2. விவிலியத்தைப் படித்து பயன்பெறவும், போட்டியில் ஆர்வத்தோடு அதிக எண்ணிக்கையில் பங்கேற்கவும் அழைக்கிறேன்.
3. ஆனந்த கங்கைத் தூது இதழில் ஒரு மாதம் கேள்வியும் பிரதி மாதம் அதற்கான பதில்களும் வெளிவரும்.
4. தொடர் விவிலியப்போட்டி ஆறு சுற்றுகளாக வெளிவரும். வழக்கம்போல பரிசுகள் மறைமாவட்ட அளவிலும், மறைவட்ட அளவிலும் வழங்கப்படும்.
5. பெயர், முகவரி, தொலைபேசி எண், பங்கு முதல் பக்கத்தில் குறிப்பிடல் அவசியம்.
6. விடைகள் யாவும் நூல், அதிகாரம், வசனம் இவைகள் குறிப்பிட்டு எழுத வேண்டும்.
7. விடைகள் **ஜனவரி 20.12.2026-ம் தேதிக்குள்** அனுப்பப்படல் வேண்டும்
8. குறிப்பிட்ட நாளுக்குள் வந்து சேராத விடைத்தாள்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
9. விடைகள் தனித்தாளில் மட்டுமே எழுதப்படவேண்டும்.

விடைகள் அனுப்ப வேண்டிய முகவரி : அருள்பணி. **ஜீவன் கிரிசாந்த்,** செயலர், கிறிஸ்தவ வாழ்வுப் பணிக்குழு வியான்னி அருள்பணி மையம், மதுரை ரோடு, சிவகங்கை - 630 561. **செல் : 63821 92028**

# பொறுமையின் கண்ணாடி புனித யோசேப்பு

சகோ. ஜெனஸ் CIC
மானாமதுரை

பொறுமை பலமா? பலவீனமா? உங்களுக்கு ஒரு உதாரணம் சொல்கிறேன். ஒரு பெரிய கண்ணாடியைப் பிடித்துக் கொள்ளும்படி உங்களிடம் தருகின்றார்கள். இரண்டு கைகளால் பிடித்து கொள்கின்றீர்கள். ஒரு ஐந்து நிமிடம்... நீங்கள் அதனை பிடித்துக் கொண்டிருந்தால், இரண்டு கைகளும் வலிக்காது. சரிதானே. இப்பொழுது அதே இரண்டு கைகளாலும் 5 மணிநேரம் பிடித்துக் கொண்டிருந்தால். இரண்டு கைகளும் வலிக்காது. சரிதானே. இப்பொழுது அதே இரண்டு கைகளாலும் 5 மணிநேரமும் பிடித்துக் கொண்டிருந்தால். இரண்டு கரங்களும் வலிக்கும் இல்லையா. சரி.. வலி எடுக்கிறது என்று அந்த கண்ணாடியை அப்படியே தூக்கி ஓரமாகப் போட்டு விட்டீர்கள் என்றால், அந்தக் கண்ணாடி உடைந்து போய்விடும். இப்பொழுது வலி தாங்க முடியாமல் நீங்கள் கண்ணாடியை வீசியதால். கண்ணாடி உடைந்து போய் விடுகின்றது. வலியை நீங்கள் தாங்கமுடியாமல் இருக்கின்ற அந்த சூழ்நிலை இருக்கின்றதே, அங்கே நீங்கள் பொறுமையை இழக்கின்றீர்கள் இப்பொழுது பொறுமையோடு நீங்கள் இருக்க வேண்டும் என்றால் அதற்குப் பலம் வேண்டும். எனவே, பொறுமை என்பது பலவீனம் ஆம் கிடையாது. அது பலமுள்ளது.

இன்று நாம் றெறுமையுள்ளவர்களாக வாழ்கின்றோம் என்றால் நாம் பலசாலிகளாக இருக்கின்றோம் என்பது அர்த்தம்.

நாட்டில் நடக்கின்ற எத்தனையோ காரியங்களைப் பார்க்கின்ற பொழுது நம்முடைய மனதிலே பொறுமை இழக்கின்றது. கோபம் வருகின்றது. என்ன காரியம் நடக்கிறது? இதைக் குறித்து நாம் கொதித்தெழ வேண்டும். அந்த இடத்தில் நிதானம் தப்பிப் போய் விடுகின்றது.



நிதானம் தப்பிப்போய் விடுகின்ற சூழ்நிலையில் நாம் என்ன செய்கின்றோம் என்பது நமக்குத் தெரியவே தெரியாது. கோபத்தில் நாம் எடுக்கின்ற முடிவு சரியானதாக அமையாது.

அன்று அப்படித்தான் புனித சூசையப்பருக்கு கோபம் வருவதற்கான நிறையக் காணரங்கள் இருந்தது. அதில் ஒன்று சொல்லலாமா... தன்னுடைய சொந்த மகனைக் கொல்லத் தேடுகின்றான் ஏரோது அரசன். அந்த வேளையில் அவருக்குள்ளே எவ்வளவு கோபம் இருந்திருக்கும். ஏரோதை ஒரு கை பார்த்து விட வேண்டும். என்கின்ற கோபம், வெறி. ஆனால் கடவுள் சொல்லுகிறார். சூசையே... நீ எதுவும் செய்யாதே உன்னுடைய குழந்தையையும், தாயையும் கூட்டிக்கொண்டு எகிப்துக்குப் போ. புனித சூசையப்பர் நினைத்திருந்தால் கடவுளிடம் சொல்லியிருக்க கடவுளே ஏரோது என்ன ஏரோது எல்லாம் ஒரு பொடிப்பயல்... என் கூட நீங்கள் இருக்கின்றீர்கள். நீங்களும் நானும் சேர்ந்தாலே அது Majority உங்கள் வெற்றியைத் தடை செய்ய

இங்கே யாருமே கிடையாது. நாம் எதற்கு பயந்து ஓடிப் போக வேண்டும் என்று அவர் கேட்கவில்லை. கடவுள் சொல்லிய வார்த்தையை மதித்து பொறுமை காத்து, இந்த இடத்திலிருந்து இயேசுவையும் மரியாவையும் அழைத்துக் கொண்டு எகிப்துக்குப் புறப்படுகின்றார். அவ்வாறு புனித சூசையப்பர் பொறுமையோடு நடந்து கொண்டபடியினால், அவரிடம் கொடுக்கப்பட்ட பணி பொறுப்பு. அந்தக் கண்ணாடியை அவர் பத்திரமாக பாதுகாத்து கொண்டதினால் தான், இன்று அவர் பொறுமையின் கண்ணாடியாக அழைக்கப்படுகின்றார்.

நம்முடைய வாழ்க்கையிலும் எத்தனையே சூழ்நிலைகளில் நாம் பொறுமை இழக்க நேரிடுகின்றது. அன்று புனித சூசையப்பர் பொறுமையிழக்கவில்லை. அதனால் தான் அவர் மீட்பின் திட்டத்தில் மாபெரும் பங்கு வகிக்கின்றார். இன்று வரை நாம் அவரை நினைக்கின்றோம். அவரை நாம் வணங்குகின்றோம். அவரை புனித நிலைக்கு உயர்த்தி இருக்கின்றோம். என்றால், அவருக்கிருந்த பொறுமை, கடவுளின் வார்த்தையைக் கேட்டு அதன் மீது நம்பிக்கை வைத்து, பொறுமை காத்து கடவுள் சொன்னபடி நடந்து கொண்டால், நாம் பொறுமை இழக்கின்ற சூழ்நிலை வந்தால் பொறுமையை இழந்து... கோபத்தினால் நாம் எடுக்கக்கூடிய முடிவுகளை எடுத்து... அதன் வழியாக வேதனைகளுக்குள்ளே விழுந்து விடுவதை விட பொறுமையை காப்போம். நாம் பொறுமையாக இருக்கின்ற வேளையில் நம்மைச் சுற்றி இருக்கின்றவர்கள். நம்மை பார்த்து என்ன இவன், ஒரு முட்டாள் பிழைக்கத் தெரியாத பைத்தியக்காரன். இந்த இடத்திலே இவன் கோபப்படாவிட்டால், இவனுக்குக் கிடைக்க வேண்டிய வாய்ப்பு கடைசிவரை கிடைக்கவே கிடைக்காது என்று... எத்தனையோ பேர் பேசிக்கொள்வார்கள். அவர்கள் என்னதான் பேசினாலும் உங்கள் அடி மனதில் ஒரு சப்தம் கேட்க வேண்டும். ஒரு குரல் கேட்க வேண்டும். அந்தக் குரல் கடவுளின் குரல். உங்களைப் பார்த்து அன்று சூசையப்பருக்குச் சொன்ன அதே வார்த்தைகளை, உங்கள் உள்மனதில் சொல்கின்றார். பொறுமையைக் காத்து கொள்ளுங்கள். எனக்கு தெரியும். இந்தச் சூழ்நிலை அநீதமானச் சூழ்நிலை. உனக்கு அப்படி செய்வது தவறு என்பது எனக்குத் தெரியும். நான் எல்லாவற்றையும் காண்கின்ற தெய்வம். இந்த இடத்தில் நான் சொல்கின்றேன். புனித சூசையப்பரைப் போல பொறுமை காத்துக் கொள்ளுங்கள். நீ பொறுமையைக் காத்து கொள்பவராக இருந்தால் எந்த இடத்திலே நீ தலைகுனிந்து நின்றாயோ... எந்த இடத்திலே நீ அவமானப்பட்டாயோ, எந்த இடத்திலே அடுத்தவர்கள் உன்னை இழிவு படுத்தினார்களோ அதே இடத்திலிருந்து நீ பொறுமையை காத்து கொண்ட படியினால் பலத்தோடு, பலவீனத்தோடு அல்ல, பொறுமை என்மீது பலம் ஆகவே பலத்தோடு நீ பொறுமையை காத்துக் கொள்ள வேண்டும். உன்னுடைய கண்ணாடியினை தூரமாக வீசி நீ உடைத்துப் போடாமல், பொறுமை காத்து கொண்டபடியினால், பொறுமையின் கண்ணாடியாகிய புனித சூசையப்பரைப் போன்று. நான் உன்னுடைய வாழ்வை செழுமையின் உயரங்களைக் காண செய்வேன். எந்த இடத்தில் நீ அவமானப்பட்டாயோ... அந்த இடத்தில் நீ செழுமையான வாழ்வைத் தேடும் அளவுக்கு நான் உன்னை உயர்த்துவேன். எனவே பிள்ளைகளே பொறுமையோடு வாழ்ந்து கொள்வோம். முடியவில்லையா.. பொறுமையின் கண்ணாடியாக அழைக்கப்படும் புனித சூசையப்பரிடம் அதனை கேட்போம். வாழ்விலே பொறுமையைக் கடைப்பிடித்து வளமையான வாழ்வை வாழ்வோம்.

# புனித வின்சென்ட் தே பவுல் மத்திய சபை - சிவகங்கை

## புனித வின்சென்ட் தே பவுல் கிளைச் சபைகளில் நடத்தப்பட்ட நிகழ்வுகள் மற்றம் ஏழைக் குடும்பங்களுக்க வழங்கப்பட்ட நலத்திட்ட உதவிகள் ( ஜனவரி மற்றும் பிப்ரவரி – 2026)

1 01.02.2026 ஞாயிற்றுக்கிழமை கல்லல் வட்டார சபையின் கீழுள்ள புனித அமல அன்னை கிளைச்சபை, திருப்பத்தூர் 30 ஆண்டு நிறைவு முத்து விழா காலை 8.00 மணிக்கு கூட்டுத் திருப்பலியுடன் தொடங்கப்பட்டது. திருப்பலியை வியான்னி அருள்பணி மைய இயக்குநர் அருள்பணி. செபஸ்தியான், ஆலங்குடி பெய்ட்டன் தோழமை மைய அருள்தந்தை. ஆண்டனி செழியன், திருப்பத்தூர் பங்குத்தந்தை அருள்பணி. S. அற்புத அரசு மூவரும் இணைந்து நிறைவேற்றினார்கள். மத்திய சபையிலிருந்து செயலர் சகோ. அலெக்ஸாண்டர், பொருளர் சகோ. அமிர்தசாமி, துணைத்தலைவர் சகோ. ஆரோக்கியசாமி, கல்லல் வட்டார சபை தலைவர் சகோ. அருளானந்தசாமி மற்றும் பொறுப்பாளர்கள் கிளைச்சபைத் தலைவர்கள், பொறுப்பாளர்கள், உறுப்பினர்கள் மற்றும் பங்கு இறைமக்கள் அனைவரும் முத்துவிழா நிகழ்வில் கலந்துகொண்டார்கள். திருப்பலி முடிந்ததும் அனைவருக்கும் கேக், மற்றும் டீ வழங்கப்பட்டது. பிறகு பங்குத்தந்தையர்களால் கீழ்க்கண்ட நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

1. 12 ஏழை மாணவர்களுக்கு தலா ரூ. 1000/– வீதம் மொத்தம் ரூ. 12,000/– வழங்கப்பட்டது.
2. ஒரு ஏழை பெண்ணுக்கு ரூ. 6.500/– மதிப்புள்ள தையல் மிஷின் ரூ. 6500/– வழங்கப்பட்டது.
3, இருதய நோயால் பாதிக்கப்பட்ட ஏழைச் சிறுவனுக்கு மருத்துவ – ரூ. 7,000/– உதவி வழங்கப்பட்டது.
4. 52 ஏழைக் குடும்பங்களுக்கு தலா ரூ. 1000/– மதிப்புள்ள ரூ. 52,000/– 10 கிலோ அரசி மற்றும் மளிகைப் பொருட்கள் வழங்கப்பட்டது.

பிறகு பங்குத்தந்தையர்கள் ஆசியுரை வழங்கினார்கள். மத்திய சபை, வட்டார சபைப் பொறுப்பாளர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள். பள்ளி மாணவிகளின் நடனங்கள், பரதநாட்டியம் மிகவும் சிறப்பாக இருந்தது. வருகைபுரிந்த அனைவருக்கும் சுவையான மதிய உணவு வழங்கப்பட்டது.

மதிய உணவிற்குப் பிறகு சரியாக 1.15 மணிக்கு கல்லல் வட்டார சபையின் 50–வது காலாண்டுக் கூட்டம் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. கிளைச்சபைகளின் 3 மாத செயல்பாட்டு அறிக்கை வாசிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டது.

மிகவும் சிறப்பாக முத்துவிழா நிகழ்வுகளை ஏற்பாடு செய்து நடத்திய திருப்பத்தூர் கிளைச் சபையின் தலைவர் சகோ. G. ஜேம்ஸ் அந்தோணி ராஜ், செயலர் சகோ. ஜோசப் ஹென்றி பொருளர், சகோதரி. ஜோஸ்பின் மல்லிகா, துணைத் தலைவர் சகோ. பிரான்சிஸ் சேவியர் மற்றும் உறுப்பினர்கள் அனைவருக்கும் மத்திய சபை, வட்டார சபை சார்பாக வாழ்த்துகளும், பாராட்டுகளும் தெரிவிக்கப்பட்டது.

## வட்டார சபைகளில் நடத்தப்பட்ட காலாண்டு கூட்டங்கள்

| வ. எண் | கூட்டம் நடந்த தேதி | | கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கியது |
|---|---|---|---|
| 1. | 24.01.2026 | புனித அமல அன்னை கிளைச்சபை, பீசர்பட்டணம் ராஜகம்பீரம் பங்கு (சிவகங்கை வட்டாரம்) | வட்டார சபைத் தலைவர். சகோ. பிரான்சிஸ் சேவியர் மற்றும் பொறுப்பாளர்கள்<br>பங்குத்தந்தை அருட்பணி. சேவியர்<br>மத்திய சபை செயலர் சகோ. அலெக்ஸாண்டர்,<br>பொருளாளர் சகோ. அமிர்தசாமி,<br>துணைத் தலைவர் சகோ. ஆரோக்கியசாமி<br>கிளைச்சபைத் தலைவர்கள்<br>பொறுப்பாளர்கள், உறுப்பினர்கள் அனைவரும் வந்து |

| வ. எண் | கூட்டம் நடந்த தேதி | கூட்டம் நடத்தப்பட்ட கிளைச்சபை | கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கியது |
|---|---|---|---|
| | | | கூட்டத்தில் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள். பங்குத்தந்தை ஆசியுரை வழங்கினார். கிளைச்சபைகளின் மூன்று மாத செயல்பாட்டு அறிக்கை வாசிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டது. பீசர்பட்டணத்தில் உள்ள ஏழை மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை ரூ. 5000/- வழங்கப்பட்டது. |
| 2. | 25.01.2026 | புனித யாகப்பர் கிளைச்சபை, சூராணம், (இளையான்குடி வட்டாரம்) | வட்டார சபைத் தலைவர். சகோ. இருதயசாமி மற்றும் பொறுப்பாளர்கள் பங்குத்தந்தை அருட்பணி. சூசைமிக்கேல் மத்திய சபை பொருளாளர் சகோ. அமிர்தசாமி துணைப் பொருளாளர் சகோ. மைக்கேல் துணைத் தலைவர் சகோ. ஹானஸ்ட்ராஜ் கிளைச்சபைத் தலைவர்கள், பொறுப்பாளர்கள், உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். பங்குத்தந்தை ஆசியுரை வழங்கினார். மத்தியசபை பொறுப்பானர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள். கிளைச்சபைகளின் மூன்று மாத செயல்பாட்டு அறிக்கை வாசிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டது. ஏழைக் குடும்பங்கள் 7 பேருக்கு தலா ரூ. 2000/- வீதம் மொத்தம் ரூ. 14,000/- நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. |
| 3. | 08.02.2026 | புனித பனிமயமாதா கிளைச்சபை, சாத்தரசன்பட்டி (சூசையப்பர்பட்டணம் வட்டாரம்) | வட்டார சபைத் தலைவர். சகோ. அருள் மற்றும் பொறுப்பாளர்கள் பங்குத்தந்தை அருட்பணி. பிரான்சிஸ் தைரியராயன் மற்றும் மத்திய சபைத் துணைத் தலைவர் சகோ. ஹானஸ்ட்ராஜ் கிளைச்சபைத் தலைவர்கள், பொறுப்பாளர்கள், உறுப்பினர்கள் வருகைபுரிந்து கூட்டத்தில் கலந்துகொண்டனர். பங்குத்தந்தை ஆசியுரை வழங்கினார். வட்டார சபைத் தலைவர், மத்திய சபை துணைத் தலைவர் வாழ்த்துரை வழங்கினார்கள். கிளைச்சபைகளின் மூன்று மாத செயல்பாட்டு அறிக்கை வாசிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டது. கல்வி உதவித்தொகை 5 மாணவர்களுக்கு தலா ரூ. 1000/- வீதம் மொத்தம் ரூ. 5,000/- வழங்கப்பட்டது. வீடு பராமரிப்பு உதவியாக ஒருவருக்கு ரூ. 9,000/- வழங்கப்பட்டது. |

## திருமண முன்தயாரிப்புப் பயிற்சி வகுப்புகள்

### மார்ச் - 2026

| எண் | தேதி | கிழமை | இடம் |
|---|---|---|---|
| 1. | 07.03.2026, 08.03.2026 | சனி, ஞாயிறு | சிவகங்கை |
| 2. | 21.03.2026, 22.03.2026 | சனி, ஞாயிறு | R.S. மங்கலம் |

அருள்பணி. **ஸ்டீபன்,** செயலர், குடும்ப நலவாழ்வுப் பணியகம்